University of Jaffna Sri Lanka
RECEIVED
Library

விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர்: 31 | வைகாசி 24 | ஷவ்வால் 31 | இதழ் 19

யாழ்ப்பாணம் | செவ்வாய்க்கிழமை | 06-06-1989

## "மலையகத்தில் தமிழரை அழிக்கும் சதி!"

### சந்திரசேகரன் குற்றச்சாட்டு

(நமது நிருபர் துவான் நஸீர்)

''மலையகத் தோட்டப் பகுதிகளில் உள்ள தரிசு நிலங்களை கிராமமக்களுக்கு பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகளையும், தோட்டங்கள் தோறும் ஊர் காவல் படைகள் அமைக்கப் படுவதையும் நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். மலையக மக்களின் எதிர்காலத்துக்கான அச்சுறுத்தலாகவே இது அமைகிறது.''

இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவர் திரு. சந்திரசேகரன் 'ஈழநாடு'வுக்கு

(8-ம் பக்கம் பார்க்க)

## மருதானை சம்பவம்: விசாரணைநடத்த கோரிக்கை

(கொழும்பு)

மருதானையில் அண்மையில் முஸ்லிம்கள் நடத்திய பேரணியில் பொலிசார்மேற்கொண்ட தடியடி, கண்ணீர்ப்புகைக் குண்டுப் பிரயோகம் தொடர்பாக உடன் விசாரணை நடத்துமாறு 'ஈ எல். ஜே. பி. கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

சம்மாந்துறையில் அண்மையில் இடம்பெற்ற வன்முறை சம்பவங்களை எதிர்த்து முஸ்லிம்கள் கொழும்பில் பெரும் ஆர்ப்பாட்டப்பேரணி ஒன்றை நடத்தினர். இப்பேரணியை கலைக்க பொலிசார் தடியடி, கண்ணீர்ப் புகைக்குண்டு பிர

(8-ம் பக்கம் பார்க்க)

# இலங்கை-இந்திய உறவு: வெங்கட்ராமன் கவலை!

## பாரத நலன்களிலும் கவனம்செலுத்த இலங்கையின்புதியதூதரிடம்கோரிக்கை

(புதுடில்லி)

அண்மைக்கால நிகழ்ச்சிகள் இலங்கை-இந்திய உறவை பாதிப்படையச் செய்துள்ளன என்று இந்திய ஜனாதிபதி திரு. ஆர். வெங்கட்ராமன் கவலை தெரிவித்துள்ளார்.

இலங்கை நன்றாக இருக்கவேண்டும் என்பதில் இந்தியாவுக்கு அக்கறை இருப்பது போல, இந்தியாவின் நலன்களிலும் இலங்கை அக்கறை செலுத்தவேண்டும் என்றும் இந்திய ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

இந்தியாவுக்கான இலங்கையின் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள கலாநிதி எவ். எஸ். சி. பி. கல்பகே, தனது நியமனத்தை நேற்று இந்திய ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தார்.

இந்த வைபவத்தில் பேசுகையிலேயே ஜனாதிபதி வெங்கட்ராமன் மேற்படி கருத்துக்களை வெளியிட்டார்.

இரு நாடுகளினதும் பரஸ்பர நம்பிக்கையின் தெளிந்த வெளிப்பாடே இலங்கை-இந்திய ஒப்பந்தம் என்று தெரிவித்த திரு. வெங்கட்ராமன்' அதனை செயற்படுத்த இரு நாடுகளும் முயலவேண்டும் என்று வலியுறுத்தினர்.

இதேவேளை, இலங்கை ஜனாதிபதியின் விசேட தூதுவராக

(8-ம் பக்கம் பார்க்க]

## புத்தூர் அசம்பாவிதம்

(யாழ்ப்பாணம்)

புத்தூர் வாதரவத்தை வீதியிலுள்ள தகரம் பிள்ளையார் கோயில் கண்டிக்காடு என்னுமிடத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற அசம்பாவிதத்தின்போது பல வீடுகள் எரிக்கப்பட்டதாகவும் உயிர்ச்சேதமும் ஏற்பட்டதாகவும் சிலர் தாக்குதலுக்குள்ளாகி விசாரணைக்காக கொண்டுசெல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சிலரின் சடலங்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடனும் அரைகுறைவாக கருகிய நிலையிலும் உறவினர்களால் அடையாளம் காணப்

(8-ம் பக்கம் பார்க்க)

## வெள்ளப் பெருக்கு: இந்தியா உதவி

(கொழும்பு)

இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களில்ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு வேண்டிய சகல உதவிகளையும் வழங்க இந்தியா முன்வந்துள்ளது.

வெள்ளத்தினுள் சிக்குண்

(8-ம் பக்கம் பார்க்க)

## மிதிவெடியில் சிக்கினர்

(வடமராட்சி)

மிதிவெடியொன்றில் சிக்கிய இந்திய அமைதிப்படை வீரர் ஒருவர் தமது கால் ஒன்றை இழந்துள்ளார்.

வழமையான ரோந்துப்பணியில் ஈடுபட்டிருந்த இவர் பருத்தித்துறை 2ம் குறுக்குத் தெரு பிள்ளையார் கோயிலடியில் சென்று கொண்டிருந்த போதே மிதிவெடியில் சிக்கினர் என்று கூறப்பட்டது.

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் இப்பகுதியில் நிலைகொண்டிருந்தபோது மேற்படி மிதிவெடி வைக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

## கொமெய்னிக்கு இறுதிமரியாதை நெரிசலில் எண்மர் பலி!

(தெஹ்ரான்)

மறைந்த ஈரானிய ஆன்மீகத்தலைவர்அயத்தொல்லா கொமெய்னிக்குஇறுதிமரியாதை செலுத்துவதற்காகக் கூடிய பல்லாயிரக் கணக்கான மக்களிடையே ஏற்பட்ட நெரிசலில் எட்டுப்பேர் பலியானார்கள்! ஐநூறுக்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர்.

நேற்று முன்தினம் காலமான கொமெய்னியின் ஜனஸா இன்று அடக்கம் செய்யப்படவுள்ளது.

## இலங்கை உறவு குறித்து ஆபிரிக்க தலைவர்களுக்கு விளக்குவார்

[புதுடில்லி]

ஆபிரிக்க நாடுகளுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இந்திய ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் இன்று சிம்பாப்வே பயணமாகிறார்.

தமது ஏழுநாள் விஜயத்தின் போது தாம் சந்திக்கவுள்ள தலைவர்களுக்கு இலங்கை-இந்திய உறவு குறித்து ஜனாதிபதி வெங்கட்ராமன் விளக்குவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய ஜனாதிபதி சிம்பாப்வே, ஸாம்பியா, தன்ஸானியா ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

## மாணவர்கள் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பாடசாலைகள் நேற்று மாணவர்கள் வராமையினால் இயங்கவில்லை.

ஆசிரியர்கள் பாடசாலைகளுக்குச் சமூகம் கொடுத்திருந்தபோதிலும், மாணவர்கள் பாடசாலைக்கு வராத காரணத்தினால், அவர்களும் மதிய நேரத்தின் பின்னர் வீடுகளுக்குத் திரும்பினர்.

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி மாணவன் எஸ்.ஆனந்தராஜா கொலைசெய்யப்பட்டதைக் கண்டித்து நேற்றைய தினம் பாடசாலைகளைப் பகிஷ்கரிக்குமாறு சக மாணவர்கள் துண்டுப்பிரசுரம் மூலம் கோரிக்கை விடுத்திருந்ததைத் தொடர்ந்தே நேற்று மாணவர்கள் பகிஷ்கரிப்பு இடம்பெற்றது. வழமைபோல இன்று பாடசாலைகள் [illegible]

## நாவற்குழி - கைதடி வீதி போக்குவரத்திற்கு தடை

(கைதடி)

நாவற்குழி - கைதடி பிரதான வீதி நேற்றுக்காலை தொடக்கம் போக்குவரத்திற்கு தடைசெய்யப்பட்டுள்ளது.

நாவற்குழி இராணுவ முகாமூடாக செல்லும் கண்டி வீதியில் பாரிய மரக்கட்டைகள் போடப்பட்டு வீதித் தடை செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சாவகச்சேரி, வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருமலை ஆகிய பகுதிகளுக்குப் புறப்பட்ட பஸ்கள் மற்றும் தனியார் வாகனங்கள் நாவற்குழி கேரதீவு ஊடாக பயணத்தை மேற்கொண்டனர்.

இதேபோல், சாவகச்சேரியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த வாகனங்கள்

(8-ம் பக்கம் பார்க்க)

## வரணியில் சம்பவம்: நால்வர் பலி

### மட்டுவிலில் கிரனேட் வீச்சு

(யாழ்ப்பாணம்)

வரணிப்பகுதியில் நேற்று இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கையில் நான்குபேர் பலியானார்கள் எனத் தெரியவருகிறது.

இந்தத் தேடுதல் நடவடிக்கையின் போது கிரனேட்டுகளும். துப்பாக்கிகளும்கைப்பற்றப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இறந்தவர்களின் சடலங்கள் சாவகச்சேரி பஸ் நிலையத்தில் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டு பின்னர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

இதேவேளை மட்டுவில் பகுதியில் நேற்றுக்காலை ரோந்துப் பணியிலீடுபட்டிருந்த படையினர் மீது கிரனேட் வீச்சு இடம்பெற்றதில் ஒருவர் இறந்ததாகக் கூறப்பட்டது.

## மினி பஸ்களுக்கு 'பாஸ்': நேற்றைய கூட்டத்தில் முடிவில்லை

(யாழ்ப்பாணம்)

மினிபஸ்களுக்கு 'பாஸ்' பெற்றுக் கொள்வது சம்பந்தமாக நேற்று நடைபெற்ற கூட்டம் எந்தவித முடிவையும் மேற்கொள்ளாமல் ஒத்திவைக்கப்பட்டது.

வட பிராந்திய மினிபஸ் சேவை சங்கங்களின் சமாஜ காரியாலயத்தில் தலைவர் திரு. பொன். மதிமுகராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வடபகுதியின் ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த முப்பது பஞ்சாயத்துச் சபைகளின் தலைவர்கள் உபதலைவர்கள் கலந்து கொண்டார்கள்.

## சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் எழுமுள்ளியில் நேற்றுக்காலை இளைஞர் ஒருவர்

(8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரி விளம்பரம்

### விற்பனைக்கு

Deepak PL -4 லேத் மெசின் புதியது விற்பனைக்குண்டு. பிள்ளையார் 259, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (சி. 2784)

சாவகச்சேரியில் கண்டி றோட் ஆஸ்பத்திரிக்கு முன்பாக சகல வசதிகளையும் கொண்ட வீட்டுடன் கூடிய மூன்று பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:- பொன்னுத்துரை இராஜேந்திரம், பருத்தித்துறை வீதி கொடிகாமம், அல்லது இரத்தினம் சந்திரகுமார் மாக்கற் லேன் கொடிகாமம். (சி. 2782)

Hisex, Goldeu Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள், கறுப்பு சேவற்குஞ்சுகள், Hyline வெள்ளை, கறுப்பு, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு வாரமும் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (சி 2726)

### தேவை

பழைய செம்பு, பித்தளை, அலுமினியம், வெண்கலம் உயர் விலைக்கு எடுக்கப்படும். பிள்ளையார், 259, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (2752)

ஆங்கில தட்டெழுத்தாளர் பெண்களுக்கு வேலைவாய்ப்பு. நேரில் தொடர்பு கொள்ளவும். ''சுப்ப கனன்'' கொப்பி சேவை, 13, நவீன சந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம். (சி-2908)


# கல்வியுடன் பண்பும், ஒழுங்கும் பாடசாலைகளில் அவசியம்!

## பிரதிக் கல்விப் பணிப்பாளர் உரை

[மட்டுவில்]

''பாடசாலைகளின் நோக்கம் மாணவர்கள் பரீட்சைகளில் சித்திபெற்றால் போதும் என்ற குறுகிய வட்டத்தினுள் அடங்கியதல்ல. குறிப்பாக பெண்கள் பாடசாலைகளில் பழக்கவழக்கம், நிர்வாகம், ஒழுக்கம், பண்பு ஆகியனவும் இருக்கவேண்டும். அதை நான் இங்கு காண்பதில் பெருமிதமடைகிறேன்.''

இவ்வாறு யாழ். மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி தில்கவதி பெரியதம்பி சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் கூறினர்.

சுமார் 6 லட்சம் ரூபா செலவில் சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட மாடிக்கட்டிடத்தைத் பிரதிக் கல்விப் பணிப்பாளர் உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார்.

வித்தியாலயஅதிபர் திருமதி தாமோதரம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அவர் மேலும் கூறியதாவது:

தென்மராட்சியில் உள்ள ஒரேயொரு மகளிர் மகாவித்தியாலயம் இது. இங்கு சகல துறைகளிலும் மாணவியர் சிறப்பாகப் பயிற்றப்பட்டுள்ளனர் என்பது நன்கு தெரிகிறது.

பாடசாலைகளில் நூல் நிலையங்களில் அவசியத்தை நான் நன்கு உணர்ந்துள்ளேன். எனவே இங்கு ஒரு நல்ல நூல் நிலையத்தை நிறுவுவதற்கான நடவடிக்கையை விரைவில்

(7-ம் பக்கம் பார்க்க)

# ஆசிரியர் பயிலுனர் 400 பேர் தேவை

(மன்னர்)

மன்னர் மாவட்டத்தில் புதிதாக ஆசிரியர் பயிலுனர்களாக 400 பேர் தெரிவு செய்யப்பட உள்ளனர்.

இவர்களின் நியமனத்தில் உதவி அரச அதிபர் மட்டத்திலேயே தெரிவுகள் இடம்பெறும். உதவி அரச அதிபர் இக்குழுவுக்கு செயலாளராக விளங்குவார். கல்வி இலாகாவைச் சேர்ந்த அலுவலர் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சபை உறுப்பினர்களும் அங்கம் வகிப்பார்கள் இதற்கான பூர்வாங்கவேலைகள் மன்னரில் துரிதமாகநடைபெறுகின்றன.

# மன்னரில் நிவாரணம் வழங்கப்பட்டது

(மன்னர்)

மன்னர் மாவட்டத்தில் இதுவரையிலும் புனர்வாழ்வு குடும்ப அளவீட்டுப் படிவங்களின்படி இடம்பெயர்ந்து பாதிப்புற்றமக்களுக்கு மன்னர் புனர்வாழ்வு அலுவலகம் நிவாரணம் வழங்கியுள்ளது.

2000ரூபா இடம் பெயர்ந்த கொடுப்பனவாகவும், 4000 ரூபாபொருளாதாரக் கொடுப்பனவாகவும் மொத்தம் குடும்பம் ஒன்றுக்கு 6000 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

அரச ஊழியர்களுக்கு 2000 ரூபா மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

## ஒலிபெருக்கி அன்பளிப்பு

(மட்டுவில்)

வில்லைவேலி ஆதீனம் மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்திற்கு புதிய ஒலிபெருக்கி சாதனம் ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. நுணுவில் கிழக்கைச்சேர்ந்த திரு, சி. சபாரத்தினம் குடும்பத்தினரே சுமார் 20,000 ரூபா பெறுமதியான இந்த ஒலிபெருக்கி சாசனத்தை அன்பளிப்புச் செய்தனர்.

## நிர்வாகிகள்

[மண்டைதீவு]

மண்டைதீவு கண்ணகை அம்மன் ஆலய பரிபாலன சபையின் வருடாந்தப்பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்புவருட நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: ஏ. எஸ். சோமசுந்தரம், உப தலைவர்: செ. நடராசா, செயலாளர்: செ. அ. ஸ்ரீபத்மராசா, உப செயலாளர்: சீ. மகேந்திரராசா, பொருளாளர்: செ. பரமானந்தம். மேலும் நிர்வாக சபைக்கு உறுப்பினர்கள்தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்களாக வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சடாச்சரசண்முகதாஸ், பகுதிக் கிராம சேவையாளரும் தெரிவாகினர்.

0 0 0

மண்டைதீவு வான்மதி விளையாட்டுக்கழக வருடாந்தப் பொதுக் கூட்டம் மகா வித்தியாலய மண்டபத்தில் கழகத் தலைவர் திரு. இ. நா இராசலிங்கம் தலைமையில் நடைபெற்றது. மண்டைதீவு கிராமசேவையாளர் திரு என். சுந்தரராஜன் கலந்துகொண்ட இக் கூட்டத்தில்புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. த. சிவபரஞ்சோதி. உப தலைவர்கள்; திரு. செ. சு. ஸ்ரீபத்மராசா, திரு. ஆ. வசந்தரூபன். செயலாளர்: திரு. ஏ. எஸ். சோமசுந்தரம், உப செயலாளர்: திரு. மா. பிரபாகரன், பொருளாளர்: [illegible] ஸ்ரீபாலன்.


### அறிவித்தல்

சுழிபுரம் பறளாய் தொண்டர்சபையினல் 26-5-89 அன்று நடாத்தப்பட்ட அதிஷ்ட லாபசீட்டிழுப்பின் முடிவுகள்:

1-ம் பரிசு - 583
2-ம் பரிசு - 1982
3-ம் பரிசு - 2683

மேற்படி பரிசுகளை இருவாரத்தில் பெற்றுக்கொள்ளவும்

தொண்டர் சபை
பறளை, சுழிபுரம்.

(சி-2906)

# L. P. GAS AT YOUR DOOR STEP.

## L.P. GAS பாவனையாளர்களே!

1. உங்கள் L. P. GAS தேவைகளை பகல் 12-00 மணிக்கு முன் எமக்கு அறியத் தாருங்கள். நாம் அன்றே உங்கள் இல்லங்களுக்கு டெலிவரி செய்கின்றோம்.
2. உங்கள் GAS தேவையை எமக்கு நேரில் தெரிவிக்க முடியவில்லையா? ஒரு தபால் அட்டையில் உங்கள் பெயர், விலாசத்தை எமக்கு அனுப்பி வையுங்கள். கிடைத்தவுடன் டெலிவரி.
3. உங்கள் GAS COOKERகளைப் பழுது பார்த்து, திருத்தி (SERVICES) கொடுக்கின்றோம்.

உங்கள் தேவை எதுவாலும்:

இலகுவான இனிய சமையலுக்கு வழிகாட்டும் RINNAI (றிணய்) GAS அடுப்புகளின் ஏக விற்பனைப் பிரதிநிதிகளான, எம்மை நாடுங்கள்:

முகமதலி அப்துலலி,
5-7, பெரிய கடை, யாழ்ப்பாணம்.
(2905)

### விற்பனைக்கு

பதனிப்பட்ட பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு.
COUNTRY OF ORIGIN HOLLAND
பிள்ளையார்
259, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம்
(சி-2785)

# ALLIANCE FRANCAISE DE JAFFNA

யாழ். பிரென்ஞசிய நட்புறவுச் சங்கம்

## கலைப்பயிற்சி ஆரம்பம்

யாழ். பிரென்ஞ்சிய நட்புறவுச் சங்கத்தின் கலை, கலாசார பரிவர்த்தனையின் அடிப்படையில்
பரதநாட்டியம், வீணை, மிருதங்கம், கர்நாடக சங்கீதம், பண்ணிசை
நவீன ஓவியப் பயிற்சி வகுப்புக்கள்
முன்னோடி ஆசிரியர் குழுவினுல் பயிற்றப்படவுள்ளது.

புதிய வகுப்புக்கள்
10-06-89 சனிக்கிழமை
ஆரம்பமாகின்றது.

அதி சிறந்த மாணவர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படும்.

தொடர்புகொள்ளவும்:-

ALLIANCE FRANCAISE DE JAFFNA,
(யாழ். பிரென்ஞ்சிய நட்புறவுச் சங்கம்)
130, 1-ம் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.
(ஏ-258)

# CENTRAL INDUSTRIES LIMITED

(FULLY OWNED SUBSIDIARY OF CENTRAL FINANCE CO. LTD.)

**POST OF SALES REPRESENTATIVE JAFFNA DISTRICT**

NATIONAL P. V. C.

As a fast growing manufacturing concern catering to an expanded market in a very competitive field we require young, dynamic Sales Representative who is enthusiastic and results orientated. If you are in the age group 20—25, personable, fluent in English and Tamil and have a flair for selling, this could be your opportunity to build a rewarding career with us.

Previous experience, though not essential, would be an advantage.

We offer excellent working conditions and an attractive remuneration package.

Apply within 10 days giving full bio-data and naming two referees not related to you.

ASST. GENERAL MANAGER,
Central Industries Limited,
270, VAUXHALL STREET, COLOMBO-2.
(A 261)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சீனஇராணுவம் சுட்டு 1400பேர் பலி

# போராட்டம் தொடர்வதாகவும் தகவல்

(பீக்கிங்)

**பீக்கிங் தியனென்மென் சதுக்கத்தில் ஜனநாயகப் போராட்டம் நடத்திவந்த மாணவர்கள் மீது சீன இராணுவத்தினர் கண்மூடித்தனமாக சுட்ட போது 1400பேர் கொல்லப்பட்டதாக இப்போது அறிவிக்கப் பட்டுள்ளது.**

கடந்த ஒருமாத காலமாக இடம் பெற்று வந்த சீன மாணவர்களின் ஜனநாயகப் போராட்டத்தைக் கட்டுப் படுத்துவதற்காக தியனென்மென் சதுக்கத்துக்குச் சென்ற இராணுவத்தினர் கவசவண்டிகள், டாங்கிகள், இயந்திரத் துப்பாக்கிகளால் கண்மூடித் தனமாக சுட்டதாகவும் இராணுவத்தினரின் இந்த நடவடிக்கையின் போதே மாணவர்களும் அவர்களுக்கு ஆதரவாக இருந்த பொதுமக்களும் கொல்லப்பட்டனர் எனறும் அறிவிக்கப்பட்டது.

இதேவேளையில் தியனென்மென் சதுக்கம் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளதாக சீன செய்திகள் தெரிவித்துள்ள போதிலும் இந்தச் சதுக்கத்தில் மாணவர்கள் தொடர்ந்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருவதாக மற்றொரு செய்தி கூறுகிறது.

கடந்த இரவு முழுவதும் பீங்கிங் நகர் எங்கும் இடைவிடாது துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் கேட்டுக் கொண்டிருந்ததாகவும் தெரிவிக்கப் பட்டது.

**சீனநகரங்களில் ஆர்ப்பாட்டம்**

சீனமாணவர் மீது இராணுவத்தினர் நடத்திய தாக்குதலைக் கண்டித்து சீனாவின் ஏனைய நகரங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றதாகவும் அறிவிக்கப்பட்டது.

**வெளிநாடுகளிலும் ஆர்ப்பாட்டம்**

இதேசமயம், சீன இராணுவத்தினரின் செயலைக் கண்டித்து ஹொங்கொங், பிரிட்டன், அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றதாகவும் அறிவிக்கப்பட்டது.

நிலைமை இவ்வாறிருக்க, மாணவர் போராட்டத்தைக் கட்டுப் படுத்தி விட்டதாகவும் அது சீனஅரசுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும் என்றும் சீன வானொலியும் தொலைக்காட்சியும் அடிக்கடி தெரிவித்தன.

## உலக சுற்றாடல் தினம்

[நியூயோர்க்]

உலகசுற்றாடல்தினம் நேற்று உலகெங்கும் கொண்டாடப் பட்டது.

## சீனத் தலைவருக்கு புற்றுநோய்

(பீக்கிங்)

சீனாவின் முதுபெருந் தலைவர் திரு. டெங் சியா வோ பெங், நோய்வாய்ப்பட்டு பீக்கிங்கில் உள்ள ஆஸ்பத்திரி ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

84 வயதான டெங்சியாவோ பெங், புற்றுநோய் காரணமாகவே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகிறார்.

## சாணவாயுவில் விளக்கு

(சென்னை)

சாண எரி வாயுவில் எரியும் கைவிளக்கு ஒன்றை தமிழ் நாடு வேளாண் பல்கலைக்கழகம் தயாரித்துள்ளது.

சாண எரிவாயு இதுவரை சமையலுக்கும் விட்டுவெளிச் சத்திற்குமே பயன்படுத்தப் பட்டுள்ளது.

தற்போது 150 ரூபா பெறுமதியான இந்தக் கைவிளக்கை தேவையான இடத்துக்குஎடுத்துச் செல்ல முடியும். இரண்டு மணித்தியாலத்திற்கு ஒரு தடவை இவ்விளக்குக்கு வாயு ஏற்றவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

## ஈரானிய ஜனாதிபதி புதிய ஆன்மீகத் தலைவர்

### கொமெய்னியின் மரணச்சடங்குகள் இன்று!

(தெஹரான்)

ஈரானின் புதிய ஆன்மீகத் தலைவராக ஜனாதிபதி அலி கொமெய்னி தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார் என ஈரானிய வானொலி அறிவித்தது.

89 வயதான அயத்தொல்லா கொமெய்னி காலமானதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கே அலி கொமெய்னி நிபுணர்கள் பேரவையினால் ஆன்மீகத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நாட்டின் தலைவரைத் தெரிவு செய்யும் பணி உட்பட பல முக்கிய கடமைகளை மேற்கொள்ளும் இந்த நிபுணர்கள் பேரவையில் நீதித்துறை நிபுணர்களும் அறிஞர்களும் அங்கம் வகிக்கின்றனர்.

இதேவேளையில் மறைந்த தலைவர் அயத்தொல்லா கொமெய்னியின் மரணச் சடங்குகள் இன்று செவ்வாய்க் கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## "மக்கள், மாணவர் பலிக்கு பெரும் தலைவரே காரணம்"

### தெங்சியாவோ பெங்மீது குற்றச்சாட்டு

(பீக்கிங்)

சீனக் கம்யூனிஸ்கட்சியின் முதுபெரும் தலைவரான டெங் சியாவோ பெங்கட்சியிலிருந்து உடனடியாக ராஜினாமாச் செய்யவேண்டும் என்றுமாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமது போராட்டத்தை நசுக்குவதற்கு இராணுவத்தை ஏவிவிட்டு நூற்றுக்கணக்கான மாணவர்களினதும் மக்களினதும் படுகொலைக்கும் காரணமாயிருந்த டெங்சியாவோ பெங் தமது பதவியை ராஜினாமாச் செய்து சீனாவில் அரசியல் ஊழலுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்றும் அரசியல் மறுமலர்ச்சி ஏற்பட வழிவிடவேண்டும் என்றும் மாணவர் தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## சோவியத்தில் இரு ரயில்கள் தீப்பிடித்து 1000 பேர் பலி!

### அநேகர் சிறுவர்!!

(மாஸ்கோ)

சோவியத் யூனியனில் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்ற ரயில் விபத்தொன்றில் சுமார் ஆயிரம் பிரயாணிகள் பலியானார்கள் என்றும் இவர்களில் அநேகர் சிறுவர்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யூரல்மலைப்பகுதியில்சைபீரிய ரயில் பாதைக்கு அண்மையில் செல்லும் 'வாயு' குழாய் ஒன்று வெடித்து வாயு வெளியேறியதை அடுத்து அருகே ஓடிக்கொண்டிருந்த இரண்டு பிரயாணிகள் ரயில்களும் தீப்பிடித்துக்கொண்டன என்றும் இத்தீயில் அகப்பட்டுக் கொண்ட பிரயாணிகள் கருகி மாண்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

**கொர்பச்சேவ் நேரில் விஜயம்**

சோவியத் அதிபர் திரு. மிக்கைல் கொர்பச்சேவ் பிரதமர் திரு. நிக்கலோய் ரிஷ்காவ் மற்றும் உயர் அதிகாரிகளுடன் விபத்து நடைபெற்ற இடத்திற்கு நேரில் விஜயம் செய்து பார்வையிட்டார்.

விபத்துக்குள்ளான இரு ரயில்களிலும் 1200 பயணிகள் பிரயாணம் செய்தனர் என்றும் இவர்களில் கருங்கடல் விடுமுறை முகாம்களுக்கு விடுமுறையைக் கழிக்கச் சென்ற சிறுவர்கள் அநேகர் இருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

விபத்தில் காயமடைந்தவர்களுக்கு வசதியாக விபத்து நடைபெற்ற இடத்திற்கு அண்மையிலேயே ஒரு ஆஸ்பத்திரி அமைக்கப்பட்டுள்ளது என்றும் மீட்பு வேலைகள் துரிதகெதியில் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சோவியத் யூனியனில் இடம் பெற்ற மோசமான ரயில் விபத்து இது எனக்கூறப்பட்டது.

இவ்விபத்தில் மரணமடைந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நேற்று நாடுமுழுவதும் ஒரு நாள் துக்கதினம் பிரகடனம் செய்யப்பட்டிருந்தது.

## சோவியத் யூனியனின் உஸ்பெக்கிஸ்தானில் இனக்கலவரம்!

(மாஸ்கோ)

சோவியத் யூனியன் மத்திய குடியரசான உஸ் பெக்கிஸ்தானில் கடந்த சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் இடம்பெற்ற இனக்கலவரத்தின் போது பலர் பலியாகினர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இனக்கலவரத்தின் போது பலர் கொல்லப்பட்டதாக மட்டுமே தெரிவித்த சோவியத் அதிகாரிகள் அதன் விபரம் பற்றி எதுவும் கூறவில்லை.

கலகக்காரர்களால் பொலிசார் தாக்கப்பட்டனர்; கார்கள், வீடுகள் எரிக்கப்பட்டன; பல கட்டிடங்கள் சேதமாக்கப்பட்டன என்றும் அறிவிக்கப்பட்டது.

## பாதிக்கப்பட்ட மாணவருக்கு உதவ புதிய திட்டம்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் அசம்பாவிதங்களால் பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்களுக்கு பாடசாலைப் படிப்பை முடித்து, பல்கலைக் கழகப் படிப்பு வரை உதவி செய்வதற்கு 'அகதிகள் புனர்வாழ்வு நிதியம்—1983' நிறுவனம் முடிவு செய்துள்ளது.

வன்செயல்களால் பெற்றோர், பாதுகாவலர், மூத்த உழைப்பாளிகளாகிய சகோதரர்களை இழந்த, உயர் கல்வி கற்கும் ஏழை மாணவர்கள் இந்த உதவி பெறுவதற்காக விண்ணப்பிக்கலாம் என்று நிறுவன அதிகாரி கூறினார்.

இவ்வுதவி பெற விரும்பும் மாணவர்கள், இறந்தவரின் மரணச் சான்றிதழ், கல்லூரி அதிபரின் சான்றிதழ், அடையாள அட்டை போட்டோப் பிரதி, வங்கிக் கணக்கு இருந்தால் அதன் விபரம், அண்மையில் எடுத்த புகைப்படம் ஒன்றுடன் இம்மாதம் 20ந் திகதிக்கு முன்னர் 'அகதிகள் புனர்வாழ்வு நிதியம்-1983', 148, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளார்கள்.

## தமிழகத்திலும் மாணவருக்கு இலவச பாடப் புத்தகங்கள்

(சென்னை)

தமிழகத்தில் ஆறுலட்சத்திற்கு மேற்பட்ட ஏழை மாணவர்களுக்கு பாடப்புத்தகங்களையும் கொப்பிகளையும் இலவசமாக வழங்க தமிழக அரசு தீர்மானித்துள்ளது.

முதலாம் வகுப்பு முதல் 8ம் வகுப்புவரையிலும் மாணவர்களுக்கு இலவசமாக புத்தகங்களும் இலவசமாகக்கிடைக்கும் என்றும் இதற்காக 20 கோடி ரூபா செலவாகும் என்றும் தமிழக கல்வி அமைச்சர் திரு. கே. அன்பழகன் தெரிவித்தார்.

## தமிழக இளைஞர் காங்கிரஸ் தலைவர்

(சென்னை)

தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் தலைவராக திரு. ஈ. என். சம்பத் நியமிக்கப்பட்டுள்ளார்.

## 'லைசென்ஸ்' துப்பாக்கிகளை வாபஸ்பெறுமாறு உத்தரவு

(கொழும்பு)

லைசென்ஸ்பெற்ற துப்பாக்கிகளை உடனடியாக வாபஸ்பெற்றுக்கொள்ளும்படி பொலிஸ்மா அதிபர் திரு. ஏனஸ்ட் பெரேரா உத்தரவு பிறப்பித்துள்ளார்.

தென்பகுதித் தீவிரவாதிகளினால் துப்பாக்கிகள் பெருமளவில் கொள்ளையடிக்கப் பட்டுவருவதை அடுத்தே இந்த உத்தரவு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில் [illegible] பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கும் பாராளுமன்றத்தேர்தல், மாகாணசபைத் தேர்தல் ஆகியவற்றில் போட்டியிட்டு தோல்வியுற்ற வேட்பாளர்களுக்கும் வழங்கப்பட்டிருந்த துப்பாக்கிகளையும் வாபஸ் பெற்றுக் கொள்ளுமாறும் உத்தரவிடப்பட்டிருக்கிறது. இந்த துப்பாக்கிகளுக்கு [illegible] படவில்லை [illegible] குறிப்பிடத்தக்கது.

## குடிநீர் தட்டுப்பாடு சர்வோதயம்உதவி

[நெல்லியடி]

கரவெட்டி கிழக்கு மக்களின் நீரில்லாப் பிரச்சினையைப் போக்கும்முகமாக அப்பகுதியிலுள்ள பழைய கிணறு ஒன்றை திருத்தியமைப்பதற்கு நிதி உதவி வழங்க வடமராட்சி சர்வோதயப் பொறுப்பாளர் திரு. கே. தில்லைநாதன் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

நீண்டகாலமாக தேடுவாரற்றநிலையில் பாழடைந்துள்ள இக்கிணற்றை இப்பகுதி மக்கள் சிரமதான மூலம் நற்புரவு செய்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

தீர்க்கதரிசிகள் தங்களுடைய நாக்கினுல் பேசுவதில்லை; வாழ்க்கையின் மூலமாகவே பேசுகிறுர்கள்.

— மகாத்மா காந்தி

# நமது நோக்கு

## ஒரு அத்தியாயம் முடிந்தது!

அயத்தொல்லாக் கொமெய்னியின் மறைவோடு ஈரானிய வரலாற்றில் பரபரப்பான அத்தியாயம் ஒன்று முடிவுக்கு வந்துள்ளது.

நீண்டகாலவரலாற்றைக் கொண்டது ஈரான்; பண்டையநாகரிகங்கள் மலர்ச்சி பெற்ற நாடுகளில் ஒன்று. ஷா மன்னர் ஆட்சியின் கீழ் அந்தநாட்டு மக்கள் பல தொல்லைகளை அனுபவித்தவர். ஆடம்பர வாழ்வில் மன்னன் வாழ - வாய்ப்பை நழுவவிடாது மேற்குநாடுகள் ஈரானின் வளத்தைச் சுரண்ட – மக்கள், பாவம், வறுமையில் வாடினுர்கள்.

எதிர்த்தவர்கள் சிறைக்குள் தள்ளப்பட்டார்கள் அத்தகையவர்களில் ஒருவர்தான் அயத்தொல்லாக் கொமெய்னி. ஒருவருடச்சிறைக்குப்பின் நாடு கடத்தப்பட்டார்.

இராமன் வனவாசம் 14 ஆண்டுகள்; பாண்டவர் வனவாசமும் அஞ்ஞாதவாசமும் 13 ஆண்டுகள் இந்த இதிகாசங்களை நினைவுபடுத்துவது போலக் கொமெய்னியின் அஞ்ஞாதவாசமும் 13 ஆண்டுகள்.

1979ல் ஈரான் மாபெரும் மக்கள் புரட்சியைக் கண்டிருக்கிறது. மக்கள் தலைவராக - ஆன்மீக புரட்சித் தலைவராக நாடு திரும்பினுர் கொமெய்னி.

மேற்கு நாடுகளின் கைப்பொம்மையாக இருந்த ஈரானில் புதிய அத்தியாயம் எழுதப்பட்டது. எந்த ஷாமன்னனுல் கொமெய்னி நாடுகடத்தப்பட்டாரோ அதே மன்னன் நாடு கடத்தப்பட்டார். இது வரலாற்றிலே நடக்கும் அற்புதங்கள்! கொமெய்னியின் ஆட்சியில் தேசிய உணர்ச்சி வலுப்பட்டது; சமய உணர்வுகள் மேலோங்கின. இவை மேலை நாடுகளுக்குக் குலைநடுக்கத்தைக் கொடுத்தன.

பல்லாண்டு காலமாக ஆசிய, ஆபிரிக்க, தென்னமெரிக்க நாடுகளிற்கொடிகட்டிப்பறந்த மேற்குநாடுகளின் செல்வாக்கை-அவர்களின் மேலாண்மைவாதத்தை நிலைகுலையவைத்திருக்கிறுர் கொமெய்னி.

சாம, பேத, தான, தண்டம்-இவைதான் கௌடில்யன் அர்த்த சாஸ்திரத்தில் அறிமுகம் செய்த அரசியல் நடவடிக்கைகள். இன்றைய காலகட்டத்தில் புதுவித நடவடிக்கைகளும் நடைமுறையில் உள்ளன. சாம, பேத, தான, தண்டத்தால் மடக்க முடியாத ஒருவரை "குணநலனைக் கொல்லுதல்" என்ற உத்தியால் மடக்க முயலுகிறுர்கள்.

எதிரியைப் பற்றிச் செய்திகளைத் திரிப்பதும், வெறுப்பை உண்டாக்கும் விதமாக விமரிசிப்பதும், கட்டுக்கதைகளைக் கட்டவிழ்த்து விடுவதும் 'குணநலக்கொலையின்' சில அம்சங்கள்!

இடிஅமீன், கடாபி வரிசையில் கொமெய்னியும் 'குணநலக்கொலை'க்கு உட்பட்டவர்.

கொமெய்னி நாட்டுப்பற்றை வளர்த்தவர். இஸ்லாமிய அடிப்படை வாதத்தைத் தொடக்கியவர்; அந்த வாதம் இஸ்லாமிய நாடுகள் எங்கும் காட்டுத்தீ போலப் பரவி இஸ்லாமியரை விழித்தெழச் செய்தது. இருபது வருட ஆட்சியில் சமய மறுமலர்ச்சியை மாத்திரமல்லாது, கிராமிய கைத்தொழில் வளர்ச்சியிலும் முன்னேற்றம் கண்டது ஈரான். இவரின் போதாத காலம், இவரின் சில தீவிர நடவடிக்கைகைகள்வெறுவாயைமென்ற மேற்கு நாடுகளுக்கு அவலாயிற்று.

தான் பல ஆண்டுகளாகத் தஞ்சம் புகுந்திருந்த ஈராக்கோடு போரிட வேண்டி ஏற்பட்டது. இவரது பிடிவாதப்போக்கால் போர் எட்டாண்டுகள் தொடர்ந்தது. அவர் மறைய முன் போர் ஓய்ந்தது. அவர் ஆன்ம சாந்திக்கு ஓரளவு வழிவகுத்தது.

சல்மான் ருஷ்டியின் நூலும், அவருக்குக் கொமெய்னிவிதித்த மரணதண்டனையும் உலகையே ஒரு கலக்குக் கலக்கியது.

உலகம் முழுவதையும் கட்டி ஆளலாம் என்ற மேற்கு நாடுகளின் போக்கை மாற்ற மகாத்மா காந்தி ஒரு வழியைப் பின்பற்றினுர். கொமெய்னி இன்னேர் வகையில் முயன்றிருக்கிறுர்; வரலாற்றில் முக்கிய இடம் பிடித்துவிட்டார்!

# 83 - 87 காலப் பகுதிகளில்
# பாதிக்கப்பட்ட பாடசாலைகளைத் திருத்த
# 97 லட்சம் ரூபா ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

1983ம் ஆண்டிலிருந்து 1987 யூலைவரை நடந்த தாக்குதல் சம்பவங்களால் யாழ். கல்வித் திணைக்களப் பாடசாலைகளில் சேதமாகிய அறுபத்திரெண்டு பாடசாலைகள் தொண்ணூற்றேழு லட்சம் ரூபா செலவில் திருத்தம் செய்யப்படவுள்ளன.

இதே பாடசாலைகளுக்குரிய கதிரை, மேசை, கரும்பலகை போன்ற தளபாடங்கள் பதினன்கு லட்சத்து தொண்ணூருயிரம் ரூபா செலவில் புதிதாகச் செய்யப்படவுள்ளன.

தளபாடங்கள் செய்வது, கட்டிடங்களைத் திருத்துவது, புதிதாக அமைப்பது போன்ற வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டதாக யாழ். கல்வித் திணைக்களத்திலுள்ள மேற்படி வேலைகளுக்குப் பொறுப்பான அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆசிய வங்கி ஒதுக்கிய இந்தப் பணத்தை அடுத்த ஆண்டு ஆகஸ்ட் மாதம்வரை பாடசாலைத் தேவைகளுக்காகச் செலவிடமுடியுமென்றும் தெரிவித்த அந்த அதிகாரி, பாடசாலைக்குரிய தளபாடங்கள் செய்துமுடிப்பது மூன்று மாதங்களில் முடிவடைந்துவிடுமென்றும், இவ்வாறு கதிரை, மேசைகள் செய்து முடிக்கப்பட்டுவிட்டால் பாடசாலை மாணவர்களின் தளபாடத் தேவையில் தொண்ணூறு வீதம் பூர்த்தியாகிவிடுமென்றும் கூறினுர்.

கட்டிட வேலைகளைப் பொறுத்தவரை மிக விரைவில் வேலைகளை முடிக்கத் தாம் முயற்சித்துவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பலாலி விமான நிலையத்திற்காகச் சுவீகரிக்கப்பட்ட பலாலி சித்திவிநாயகர் வித்தியாலயம் தெல்லிப்பழை ப.நோ. கூட்டுறவுச் சங்கத்திடம் பெற்ற காணியில் புதிதாகப் பத்து லட்சம் ரூபா செலவில் இரு மாடிகளைக்கொண்டதாக அமைக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கட்டிடங்களை மேற்பார்வை செய்ய தொழில்நுட்பப் பகுதியைச் சேர்ந்த ஓவசியர்கள் பத்துப் பேரே தற்போது உள்ள

(6-ம் பக்கம் பார்க்க)

## இந்த ஆசிரியர்கள் நிலை என்ன?

ஆங்கில ஆசிரியர், உடற்பயிற்சி ஆசிரியர், இசை, நடன ஆசிரியர் ஆகிய வெற்றிடங்களுக்கு அரசாங்கம் விண்ணப்பங்கள் கோரியபோது கல்வித் தகைமையாகக் க.பொ.த. (சா/தர) சித்தியும், அத்துறைகளில் வேறு பல விசேட தகைமைகளும் கேட்கப்பட்டிருந்தது. இதனுல் இத்தகைமைகளைக் கொண்ட பலர் மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பித்ததோடு, பல பாடசாலைகளிலும் நிலவிய ஆசிரியர் பற்றுக்குறையைப் போக்குமுகமாகத் தொண்டர் ஆசிரியர்களாகவும், வசதிகள் சேவைக் கட்டண ஆசிரியர்களாகவும், பாடசாலை அபிவிருத்திச் சங்க ஆசிரியர்களாகவும் பணி புரிந்துவருகின்றனர்.

ஆனுல் தற்பொழுது யாழ் மாவட்டக் கல்வித் திணைக்களம் தொண்டர் ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க ஆசிரியர்கள், வசதிகள் சேவைக் கட்டண ஆசிரியர்கள் ஆகியோரின் விபரங்களைத் திரட்டிவருவதோடு, இவர்களுக்குத் தற்காலிக நியமனங்கள் வழங்கப்போவதாகவும் அறிவித்துள்ளது. அத்துடன் இதற்காக விண்ணப்பப் படிவமொன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

இவ்விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரிகள் க. பொ. த. (உ/தர) பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியெய்தி இருக்கவேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதனுல் க. பொ. த. (சா/தர) சித்தியுடன் மேற்குறிப்பிட்ட ஆசிரியர்களாகப் பணிபுரியும் என் போன்ற ஆசிரியர்களின் நிலை என்ன? எம் மீதும் யாழ். கல்வித் திணைக்களம் கருணை காட்டுமா? இல்லையேல் வழங்கப்படவிருக்கும் ஆசிரியர் பயிற்சிப் பயிலுநர் பதவிக்காவது சேர்த்துக் கொள்வார்களா?

**எஸ். தேவகி**
அல்வாய் தெற்கு.

# மக்கள் கருத்து

## இந்துக் குருமார்களுக்கு பொது அமைப்பு வேண்டும்

அகில இலங்கை இந்து இளைஞர் பேரவை மகாநாடு அண்மையில் நடைபெற்ற போதுகுருமார்களுக்கு பயிற்சி நிலையம் அமைத்தல், வறுமை நிலையில் உள்ள குருமார்களுக்கு உதவுவதற்கு நிதியம் அமைத்தல் போன்ற தீர்மானங்கள் பெருமனதுடன் வரவேற்கப்பட்டன.

ஏனைய மதங்களைப்போன்று இந்து மதத்திலேகுருமார்களை எல்லாம் இணைக்கும் பொதுவான அமைப்பு ஒன்று உருவாக்குவதற்கு குருமார்கள் யாவரும் முன்வருதல் வேண்டும். குருமார்களின் அமைப்புக்கு இலங்கை இந்துஇளைஞர் சங்கமும் ஏனைய இந்து சமய ஸ்தாபனங்களும் பக்கபலமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

அகில இலங்கை இந்து இளைஞர் பேரவை, குருமார்களுக்கான பயிற்சி நிலையம் அமைப்பது பற்றி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. குருமார்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக பெருமை படைத்த ஓரிரு குருமார்களாலும், பெருமக்களாலும் ஆங்காங்கே வகுப்புகள் நடாத்தப்பட்டு வருகின்றபோதிலும் பல கஷ்டங்களுக்கு மத்தியில் "யாழ் சிவானந்த குருகுலம்" [illegible] பணியிலே முழுமையாக ஈடுபட்டுவருகின்றது. தனக்கென ஒரு நிலையான இடமில்லாது பலகாலமாக நடைபெற்று வந்த குருகுலமானது இப்பொழுது ஒரு பெரியாரின் நன்கொடை மூலம் கிடைத்த காணியில் (யாழ்ப்பாணம், கடைச்சாமி வீதியில்) நிரந்தரமான ஒரு கட்டத்தில் நடத்தப்பட்டு வருகின்றது. மேற்படி குருகுலத்துக்கு அகில இலங்கை இந்துமாமன்றம் வருடம் தோறும் வழங்கும் ஓரளவு நிதியுதவி தவிரவேறு உதவிகள் ஏதும் அற்றநிலையில் அது பல தேவைகளை எதிர் நோக்கி உள்ளது.

ஆகவே இந்து இளைஞர் பேரவையினரும், ஏனைய இந்து சமய ஸ்தாபனங்களும் ஒரு பயிற்சி நிலையத்தை நிறுவுவதை விடுத்து சிவானந்த குரு குலத்தை மேம்படுத்துவதற்கு ஆவன செய்ய முன் [illegible] கொள்கிறேன்.

**ந. சதாசிவஐயர்**
கோப்பாய்.

# நால்வரைத் தேடி
# பொலிஸ் தீவிர நடவடிக்கை

(கொழும்பு)

கடந்த வியாழக்கிழமை சுட்டுக் கொல்லப்பட்ட விசேட விசாரணைப் பிரிவின் அதிபர் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி திரு. பெனட் பெரேராவின் கொலை தொடர்பாகப் பொலிசார் நான்குபேரைத் தேடும் முயற்சியில் இறங்கியுள்ளனர்.

இவரது கொலைக்கு இருவரே காரணமென முதலில் தகவல் கிடைத்திருந்ததாகவும் தற்போது அதில் நால்வர் ஈடுபட்டதாகத் தமக்கு நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து இரகசியத் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும், இவர்களைத் தேடும் முயற்சிகள் தற்போது தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் வந்த வாகனமும் கொலை நடந்த பகுதியில் மறைத்துவைக்கப்பட்டுள்ளதாகவும், கொலைஞர்கள் எவரும் முகமூடி எதுவும் அணியாததால் இவர்களை விரைவில் பிடித்துவிடமுடியுமெனத் தாம் நம்புவதாகவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# "சரியான முடிவெடுப்பவரே சமூகத்தின் வழிகாட்டி"
### சேவை நலன் பாராட்டு விழாவில் உரை

[சுன்னுகம்]

"பெரியோர்கள் பிரச்னைகளை எவ்வாறு எதிர்கொண்டு தீர்க்கிறுர்கள் என அறிந்து கொள்வதில் எமக்கு நிரம்பிய அனுபவங்கள் ஏற்படுகின்றன. எந்தவொரு விடயத்திலும் சரியான முடிவெடுக்கும் தன்மையுள்ளவர் மற்றவர்களுக்கு முன்மாதிரியானவர். கடமை நேரத்தில் நாம் ஒவ்வொருவரும் சரியாகப் பணியாற்றினுல் எமது நாடு இன்னமும் முன்னேற்றமடையும்".

இவ்வாறு மானிப்பாய் வட்டாரக் கல்வியதிகாரியாகக் கடந்த 13 வருடங்கள் பணியாற்றி கோட்டக்கல்வி அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்று கிளிநொச்சி மாவட்டத்துக்கு இடம் மாறிச் செல்லும் திரு. எஸ். தனஞ்செயனுக்கு மானிப்பாய் வட்டாரப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் ஒருங்கிணைந்து நடத்திய சேவை நலன் பாராட்டு விழாவில், மருதனுமடம் கோட்டத்திற்குப் பொறுப்பான கல்வி அதிகாரி திரு. ஆர். கே. குலசேகரன் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

கொத்தணி அதிபர் திரு. பொ. நாகரத்தினம் தலைமையில் இராமநாதன் மகளிர் கல்லூரி பிரதான மண்டபத்தில் இவ்விழா நடைபெற்றது. திரு. குலசேகரன் தொடர்ந்து பேசுகையில், வளரும் கிளிநொச்சி மாவட்டம் இவரின் சேவையால் பயன்பெறும் என்று கூறினுர்.

யாழ். கல்வித் திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு. க தங்கராசா, யாழ். கோட்டக் கல்வி அலுவலகக் கல்வி அதிகாரி திரு. க. மகேசவேல், மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி கல்யாணசுந்தரேசன், உடுவில் கொத்தணி அதிபர் திருமதி க.குமாரசாமி உட்பட மற்றும் பலர் உரையாற்றினர்.

ஏழாலை கொத்தணி அதிபர் திரு. த. டானியல் பொற்கிழி வழங்கினுர்.

## சக்தி பீடத்தில் அமர்ந்து இருப்பாள்

சக்தி பீடத்தில் அமர்ந்து இருப்பாள்
சமரசத் தையே சாற்றி மகிழ்வாள்
சித்தி பற்பல பெற்றிட அருள்வாள்
சிவத்தின் செயல்களைச் செய்து முடிப்பாள்
நித்தி யம்அவள் பூசனை என்றே
நினைந்து துணிந்து பணிந்து கசிந்து
பக்தி செய்திடில் பவவினை தீர்ப்பாள்
பகவதி நாக பூஷணி அம்மாள்

**நாக. சண்முகநாதபிள்ளை**

[ இன்று நயினை உற்சவம் 2-ம் திருவிழா ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அமைதிப்படை வாபஸ் நடைமுறை அசாத்தியம்"

## பத்திரிகையாளர் மகாநாட்டில் வடக்கு - கிழக்கு முதல் அமைச்சர்

(வவுனியா)

''வடக்கு-கிழக்கு மாகாண சபை சரியான முறையில் அமைக்கப்படவில்லை ஒத்துழைப்பு தரவேண்டிய மத்திய அரசு ஒத்துழைப்புத் தரவில்லை, அதிகார பரவலாக்கம் தெளிவான முறையில் இடம் பெறவில்லை. சிறிலங்கா இராணுவம் சிங்கள இராணுவமாகவே உள்ளது. இப்படியான சூழலில் இந்திய அமைதிப்படை வாபஸ் பெறப்படுவது என்பது நடைமுறை சாத்தியமற்ற விடயமாகும்.''

இவ்வாறு வடக்கு - கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாள் வவுனியாவில் நடத்திய செய்தியாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

வவுனியா ஈ. பி. ஆர். எல். எவ் அலுவலகத்தில் நடத்தப்பட்ட இந்த மகாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு கிழக்கு மக்களுக்கிடையில் குறிப்பாக தமிழ் முஸ்லிம் மக்களிடையே கலவரத்தை தூண்டுவதற்கு அரச சக்திகளே மும்மரமாக ஈடுபடுகின்றது.

தமிழ் மக்கள் சிங்கள இராணுவம் உள்ள பகுதிகளில் விவசாயம் செய்யவோ போக்குவரத்து செய்யவோ முடியவில்லை.

சம்மாந்துறையில் இலங்கைப் பொலிசாரே கலவரத்தை தூண்டினார்கள் என அவ்வூர் தமிழ் மக்கள் குற்றஞ் சாட்டினார்கள்.

இப்படியான நிலையில் இலங்கை அரசு தமிழ் மக்களுக்கு எவ்வாறு பாதுகாப்பு தரும் என்று நம்பமுடியும்.

வெலிஓயா குடியேற்ற திட்டம், மகாவலி குடியேற்றத் திட்டம், மதுறு ஓயா குடியேற்றத் திட்டம் போன்ற பல்வேறு நீர்ப்பாசன திட்டங்கள் மூலம் சிங்கள குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அது மட்டுமல்லாது தேசிய வீடமைப்பு திட்டம் என்ற பெயரில் சிங்கள குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

திருமலையில் தமிழ் பேசும் மக்களை பழிக்குப்பழி வாங்குவதற்காக சிலர் தருணம் பார்த்து நிற்கின்றனர்.

**சிங்களக் குடியேற்றங்கள்**

சிங்கள குடியேற்றத் திட்டங்களை தீவிரமாக மேற்கொள்வதற்காகவும், தமிழ் பேசும் மக்களைப்பழி வாங்குவதற்குமாகவே அமைதிப்படை வாபஸ் கோரிக்கை முன் வைக்கப்படுகின்றது என்றே நாம் சந்தேகிக்கின்றோம்.

மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை வழங்குவதற்கு பதிலாக சாக்கு போக்கு சொல்லிக் கொண்டு காலத்தை இழுத்தடித்துக்கொண்டு மத்திய அரசின் அதிகாரத்தை மாவட்ட அதிபர்களின் ஊடாகவே தொடர்ந்தும் செயற்படுத்த முனைகின்றது. இலங்கை அரசு.

வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் ஒரு முழுமையான சிவில் நிர்வாக சூழல் ஏற்பட்டதின் பின்புதான் இங்கிருந்து அமைதிப்படை வெளியேறலாம். அப்படியான ஒரு சூழலில் இலங்கை இராணுவம் எமது பிரதேசங்களில் இருக்கக் கூடாது.

வடமராட்சிப் பகுதியில் இலங்கை இராணுவம் தமது முகாம்களை பலப்படுத்துவதாக அறிகின்றோம். இது இராணுவ முற்றுகைக்கான ஒரு முஸ்திபு என்றே கருதவேண்டியுள்ளது.

இந்த செய்தியாளர் மகாநாட்டின்போது வவுனியா மாவட்ட அரசியல் இணைப்பாளர் திரு. பி. பராபரனும் உடன் இருந்தார்.

## நிர்வாகிகள்

[நெல்லியடி]

கரவெட்டி கிழக்கு நாமகள் சனசமூக நிலைய புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு. எஸ். கணேசராசா, உப தலைவர்கள்: திரு. எஸ். தெட்சணாமூர்த்தி, திரு. வி, செல்லத்துரை, செயலாளர்: திரு. என். சிவசீலன். உபசெயலாளர்: திரு. என். செல்வேள், பொருளாளர்: திரு. கே. வேலாயுதம்பிள்ளை, போஷகர்: திரு. எ. நமசிவாயம், நூலகப் பொறுப்பாளர்: திரு. எஸ். பரராசசிங்கம், உதவி நூலகப்பொறுப்பாளர்: திரு. கே. இளங்கீரன்.

மேலும் ஐந்து பேர்கள் கொண்ட செயற்குழு உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## இப்படியும் நடக்கிறது

சில தினங்களுக்கு முன்னர் கொழும்பு மருதானைப் பகுதியில், மோட்டார் சைக்கிள் உதிரிப் பாகங்களைக் கொள்ளையடித்த ஒரு கும்பலைப் பொலிஸார் கைதுசெய்தனர் என்றும், கைதானவர்களில் சிலர் மோட்டார் சைக்கிள் உதிரிப் பாகங்களை விற்பனை செய்யும் கடை உரிமையாளர்கள் என்று விசாரணையில் தெரியவந்திருந்தது என்றும் குறிப்பிட்டிருந்தேன் அல்லவா?

இந்தக் குறிப்பை வாசித்த காரைநகர் வாசகர் ஒருவர் விழிப்படைந்து, அடுத்த நாளே கொழும்பு பயணமாகிவிட்டார்.

காரணம், அந்தக் 'கோஷ்டி'யினால் இவரும் பாதிக்கப்பட்டவர்தானும்.

இவரது மோட்டார் சைக்கிளின் பின் சக்கரம் அங்கு அபேஸாகிவிட்டதாம்!

"ஊடுருவி"

# "உலகெல்லாம் தமிழ் முழக்கம் செய்யவேண்டும்"

## தமிழ்த்தின விழாவில் உரை

(சுன்னுகம்)

தமிழ்மக்கள் தமக்குள்ள தனித்துவ வாழ்வு மூலம் தமிழ்மொழியின் பெருமையை உலகறியச் செய்யவேண்டும்.

இவ்வாறு ஏழாலை மகா வித்தியாலய தமிழ்த்தின விழா வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய ஏழாலை சைவசமய அபிவிருத்திச் சங்கத்தலைவர் திரு. சி. சக்திகிரீவன் குறிப்பிட்டார்.

ஏழாலை கொத்தணி அதிபர் திரு. ரி. டானியல் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் தொடர்ந்து திரு. சக்திகிரீவன் பேசுகையில் உலகில் வளர்ச்சி அடைந்த மொழிகளில் தமிழும் ஒன்று இதன் பெருமையைப் பாரதியார் புகழ்ந்துரைத்துள்ளார். இதன் சிறப்பு இவ்வளவுடன் மட்டும் இருந்துவிடவில்லை. உலகின் ஆட்சி மொழியாக எம்மொழி இருக்கின்றதோ அம்மொழி வினைவளம் பொருந்திய மொழியாக இருக்கின்றது. அதுபோல் தமிழிலும் வினைவளம் நிரம்பியிருக்கின்றது. ஆகையால் தமிழ்மொழி ஆட்சிமொழி அந்தஸ்துப் பெற்றிருப்பது வியப்புக்குரிய ஒன்றல்ல. தமிழ் மாணவர்கள் தமிழை நல்லபடி கற்று அதிலுள்ள பெருமைகளை அன்னிய பாஷைகளிலும் மொழி பெயர்க்க வேண்டும் என்று குறிப்பிட்டார். வைபவத்தின் இறுதியில் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

# மண்டைதீவுப் பகுதியில் குடிநீர் தட்டுப்பாடு

(மண்டைதீவு)

மண்டைதீவுக் கிராமத்தில் குடிநீர்த் தட்டுப்பாடு அதிகரித்துள்ளது. இதனால் மக்கள் பெரும் சிரமங்களுக் குள்ளாகி வருகின்றனர். இப்பகுதியில் உள்ள நன்னீர்க்கிணறுகள் முற்றாக வற்றும் நிலையை அடைந்துள்ளன.

சில கிணறுகளில் மழையின்மையால் நீர் உவர்த்தன்மையுள்ளதாக மாற்றமடைந்து வருகின்றது.

இதனால் இப்பகுதி மக்கள் அல்லைப்பிட்டி, மண்கும்பான் பகுதிகளுக்கும் தண்ணீர் எடுக்கச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து மண்டைதீவு மறுமலர்ச்சி இயக்கம் சமூகசேவை அத்தியட்சகருக்கும், தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபருக்கும் முறையீடு செய்துள்ளது. கடந்த காலங்களில் மண்டைதீவுக் கிராமத்துக்கு வரட்சியால் பாதிக்கப்பட்டபோது குடிநீர் விநியோகிக்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

கடந்த சில வருடங்களாக இக் கிராமத்தில் சமூகசேவைப் பகுதியினரது குடிநீர் விநியோகம் நடைபெறவில்லை. இம்முறை அதிகரித்துள்ள குடிநீர்த் தட்டுப்பாட்டைத் தீர்க்க குறுகிய காலத்திட்டத்திலாவது நீர் வழங்கி உதவுமாறு மேற்படி கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் இந்து தமிழ் பெண் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பாடசாலை மாணவர்களுக்கு இலவச மதியபோசனம் வழங்க உதவுவதற்கு 1250/- ரூபா பெறுமதியான சமையல் பாத்திரங்களை பாடசாலை அதிபரிடம் அன்பளிப்புச் செய்துள்ளது.

மாணவர் சார்பில் பாடசாலை அதிபர் சங்கத்தினர்க்கு நன்றி தெரிவித்துள்ளார்.

### 88-ல் போதைவஸ்து வழக்குகள்:

# வடபகுதி நீதிமன்றங்களிடம் விபரம் கேட்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

போதைவஸ்து குற்றங்களுக்காகத் தண்டனை வழங்கப்பட்டிருந்தால் தண்டிக்கப்பட்டோர் விபரங்களடங்கிய பட்டியல் ஒன்றைத் தயாரித்து அனுப்புமாறு வடபகுதி நீதிமன்றங்கள் கேட்கப்பட்டுள்ளன.

கொழும்பிலுள்ள ஐக்கிய நாணய சபையின் போதைவஸ்து கட்டுப்பாட்டுச்சபையே இக்கோரிக்கையை விடுத்துள்ளது.

கடந்த ஆண்டில் போதைவஸ்து கடத்தல், விநியோகம். பாவனை தொடர்பான குற்றச் செயல்கள்மீது தண்டனை வழங்கப்பட்டிருந்தால் தண்டிக்கப்பட்டோர் விபரங்கள், தண்டனை விபரங்கள் கோரப்பட்டுள்ளன.

(மட்டுவில் நிருபர்)

# "மாணவர் படுகொலைகள் நிறுத்தப்படவேண்டும்"

## யாழ்.பல்கலைக்கழக மாணவர்சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

''யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி மாணவன் ஆனந்தராஜா கொலைசெய்யப்பட்ட சம்பவம், மாணவர் சமுதாயத்தைப் பொறுத்தமட்டில் மிகவும் வேதனைக்கும், விசனத்திற்கும் உரியதும், வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதுமாகும்.''

இவ்வாறு யாழ். பல்கலைக் கழக மாணவர் சங்கம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சங்கம் சார்பாக செயலாளர்விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''காலங்காலமாகத் தொடர்ந்துவரும் இப்படுகொலைச் சம்பவம் நிறுத்தப்படவேண்டும் என்று நாம் திரும்பத் திரும்பக் கூறிவந்துள்ளோம். எனினும் இச்சம்பவங்கள் அதிகரித்த வண்ணமே உள்ளன. இந்நிலையில் இவற்றை நிறுத்துவதற்காக மாணவர் சமுதாயம் ஒருங்கிணைந்து செயற்படவேண்டும். இவ்வகையில் பாடசாலை மாணவர்கள் முன்னெடுக்கும் போராட்டங்களுக்கு யாழ். [illegible] திய நாம் எமது பரிபூரண ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறோம்,

மாணவர் சமுதாயத்தின் மீதான படுகொலைகள், கைதுகள், மிரட்டல்கள் என்பன தொடருமாயின் எமது கல்வி மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுவிடும். மாணவரின் கல்வியைப் பாதிக்கும் எவ்வகையான செயற்பாடும் உடனடியாக நிறுத்தப்படாதவிடத்து தமிழ்பேசும் மக்களின் எதிர்காலம் நாம் விரும்பியோ விரும்பாமலோ கேள்விக்குறியாகிவிடும் என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் நினைவிற் கொள்ளவேண்டும்.

### உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சையில்

# சித்திபெற்ற பரீட்சார்த்திகள் கொழும்புக்கு அழைக்கப்படுவர்!

(யாழ்ப்பாணம்)

அண்மையில் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சையில் சித்திபெற்ற அனைவரும் கொழும்புக்கு அழைக்கப்படவிருப்பதாகத் தெரிய வருகிறது.

''இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம்'' கடந்த மாதம் அகில இலங்கையிலும் நடாத்திய உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சையில் மொத்தம் 41 பரீட்சார்த்திகள் மட்டுமே சித்தியடைந்துள்ளார்கள். இவர்களில் மூன்றும் தரத்தில் 31 பரீட்சார்த்திகளும், இரண்டாம் தரத்தில் 4 பரீட்சார்த்திகளும், முதலாம் தரத்தில் ஒரு பரீட்சார்த்தியும் சித்தியடைந்துள்ளார்கள்.

வடக்கு மாகாணத்தில் மட்டும் மூன்றும் தரத்தில் 10 பரீட்சார்த்திகளும், 2ம் தரத்தில் 3பரீட்சார்த்திகளும் சித்திபெற்றது குறிப்பிடத்தக்கது.

மேற்படி பரீட்சையின் பெறுபேறுகள் குறித்து, பல உதைபந்தாட்ட லீக்குகள், தமக்கு ஆட்சேபம் தெரிவித்திருப்பதாகவும், அதன் நிமித்தம் இப் பரீட்சையில் சித்திபெற்ற அனைவரையும் தாம் கொழும்புக்கு அழைக்கவிருப்பதாகவும் இலங்கை உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் சங்கத் தலைவர் திரு. எம். பேரின்பநாயகம் தெரிவித்தார். (வி)

## சான்றிதழ் வழங்கல் துரித வேகம்

(மன்னூர்)

மன்னூர் பிறப்பு, இறப்பு பதிவாளர் அலுவலகத்தில் சான்றிதழ் வழங்கல் தற்சமயம் துரிதமாக நடைபெறுகின்றன.

வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் நன்மை கருதி, மாவட்ட மேலதிக பதிவாளர் திரு. ஏ. அந்தோனிப்பிள்ளை அலுவலகத்தில் பொது மக்கள் சமர்ப்பிக்கும் விண்ணப்பங்களுக்கு குறைந்த பட்சம் மூன்று தினங்களுள் சான்றிதழ் வழங்க ஏற்பாடு செய்துள்ளார்.

## விடுமுறை நாட்களிலும் வேலை நடக்கிறது

(சுன்னுகம்)

மருதனுமடம் கோட்டக் கல்வி அலுவலகத்தில் விடுதலை நாட்களிலும் வழமையான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. வேலைகளை குறை இல்லாமல் செய்வதற்காகவே சனி, ஞாயிறு உட்பட லீவு நாட்களிலும் பணி புரிய வேண்டியிருப்பதாக கோட்டக் கல்வி அதிகாரி திரு. இ. க. குலசேகரன் தெரிவித்தார்.

## புதிய அதிபர்

(மன்னூர்)

மன்னூர் வஞ்சியன்குளம் றோமன் கத்தோலிக்க பாடசாலையின் அதிபராக திரு. ஏ. ஜெயதாஸ் மிராண்டா நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர் விவசாயப் பயிற்சி பெற்ற அதிபராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகம் பிராணுயாமம்



## குரு பாதம்

[சாந்தியோகாநிலேயச் சுவாமிஜி ஸ்ரீசிதானந்தயோகி அவர்கள் கடந்த மாதம் 31ந் திகதி தமது 77வது ஜனன தினத்தைக் கொண்டாடினுர். மக்களின் ஆரோக்கிய வாழ்க்கைக்கு அவர் காட்டும் நெறிமுறை இங்கு தொடர்ச்சியாக வெளியிடப்படுகிறது]

ஆசனம், பிராணுயாமம் என்பனவற்றைக் குரு வணக்கம், இறை வணக்கம் என்பவற்றுடனேயே ஆரம்பித்தல்வேண்டும்

ஓம் காரம் ஜெய ஓம் காரம்
உலகமனைத்தும் ஓம் காரம்
ஓம் குருவே சரணம்
ஓம் குருவே சரணம்
ஓம் குருவே சரணம்

ஆதிபராசக்தி, ஆசனம்
பிராணுயாமம்
சித்திபெற வரம் பிரசாதிக்க
வேண்டும்

ஓம் சக்தி
ஓம் சக்தி
ஓம் சக்தி.

(நாளை வரும்)

# "கல்வி வளர்ச்சிக்கு தேகாப்பியாசம் உறுதுணை"

## பிரதிக் கல்விப் பணிப்பாளர் உரை

(அச்சுவேலி)

"உடற்பயிற்சிகளும், விளையாட்டுகளும் மாணவர்களின் உடல் உள வளர்ச்சியை மேம்படுத்துவதுடன் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைகின்றன. எனவே பாடசாலைகள் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கான சகல செயற்பாடுகளையும், வேலைத்திட்டங்களையும் மேற்கொள்ளவேண்டும்."

புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலய வருடாந்த மெய்வல்லுநர் போட்டிகள் நடைபெற்றபோது யாழ். மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வித்தியாலய அதிபர் திரு. க. மணிசுந்தரம் தலைமையில் வினஸ் விளையாட்டு மைதானத்தில் இவ்விளையாட்டுப்போட்டி நடைபெற்றது.

செல்வி திலகவதி பெரியதம்பி தொடர்ந்து உரையாற்றும்போது, மாணவர்களின் எதிர்கால நல்வாழ்விற்கும், சமுதாய முன்னேற்றத்திற்குமான கல்வி, பாடசாலைகளில் நெறி முறைப்படுத்தப்பட்டுப் போதிக்கப்படவேண்டும். இந்தவகையில் மாணவர்களின் உடல் உள வளர்ச்சிக்கு, உடல் பயிற்சிகளும் விளையாட்டுக்களும் மிக முக்கியமானவை. இது மாணவர்களின் கல்வி வளர்ச்சியை வளர்த்துச் சென்று முழுமையடையச் செய்யும்.

"வாழ்க்கையில் வெற்றியும், தோல்வியும் ஏற்படக் கூடியன. இதனை விளையாட்டில் மாணவர்கள் சந்திப்பதன் மூலம் இரண்டையும் அனுபவித்தறியமுடியும். இன்றைய தோல்வியைப் பயன்படுத்தி நாளைக்கு வெற்றிபெற முயற்சிப்பார்கள்.

"இன்று கல்வித்திட்டமும், கற்பித்தல் முறைகளும் பொதுவானவையாகக்காணப்பட்டபோதிலும் பாடசாலைகளில் காணப்படும் வசதிகள் வசதிக்குறைவுகளை அடிப்படையாகக் கொண்டு பாடசாலைகள் மதிக்கப்படுகின்றன. இந்தவகையில் இந்தப் பாடசாலைகளின் குறைபாடுகளை எதிர்காலத்தில் போக்கி வளர்ச்சியடையச் செய்வேன். யாழ் மாவட்டத்தில் மிகச்சிறப்பான ஒரு விளையாட்டு மைதானத்தை இங்கே காணமுடிகின்றது. இந்த வசதியை உரிய முறையில் பயன்படுத்தி மேலும் முன்னேறவேண்டும்" எனக் கூறினுர்.

புத்தூர் கொத்தணிப் பாடசாலை அதிபர் திரு. என். கணேசபிள்ளை, ஆசிரியர் திரு. இ. நிர்மலன் ஆகியோரும் உரைநிகழ்த்தினர்.

முறையே பாரதி இல்லம், வள்ளுவன் இல்லம், கம்பன் இல்லம் 1ம், 2ம், 3ம் இடங்களைப் பெற்றுக்கொண்டன.

## புதிய பவுசர்கள்

(கிளிநொச்சி)

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு கிளிநொச்சி மாவட்டத்திற்கென இரண்டு நவீன தண்ணீர் பவுசர்களை டிராக்ரர் இணைப்புடன் அனுப்பி வைத்துள்ளது.

இந்தபவுசர்கள் கிளிநொச்சி கச்சேரிக்குக்கொண்டுவரப்பட்டுள்ளது. இதில் ஒன்று கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலைக்கு வழங்கப்படலாம் எனவும் மற்றது பளை உதவி அரச அதிபர் பிரிவிற்கு வழங்கப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## இலவசக் கல்வி

(மண்டைதீவு)

மண்டைதீவில் வறிய குடும்பங்களைச் சேர்ந்த சைவச் சிறுர்களுக்கு இலவசக் கல்வி வழங்கும்திட்டத்தில் மண்டைதீவு இந்து இளைஞர் மன்றம் "பாலர் கல்வி நிலையம்" ஒன்றினை நடாத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த நிலையத்தில் பண்ணிசை வகுப்பு ஒன்றையும் இம்மன்றம் நடாத்த ஏற்பாடுகள் செய்துள்ளது. புனர்வாழ்வுத் திட்ட நிதியம் ஒன்றின் உதவியுடன் இந்த இலவசக் கல்வி நிலையம் நடத்தப்படவிருப்பதாக இந்த மன்றத்தின் செயலாளர் தெரிவித்தார்.

## புத்தூர் முதலிடம்

[அச்சுவேலி]

யாழ். மாவட்டரீதியில் நடைபெற்ற வீட்டுத்தோட்டப் போட்டியில் புத்தூர் கமநல சேவை நிலையத்திற்கு முதலாம் இடம் கிடைத்துள்ளது.

புத்தூர் கமநல [illegible] யப்பிரிவைச் சேர்ந்த திரு. என். சிவகுருநாதன் இவ்வீட்டுத்தோட்டப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று 7500 ரூபா பணப் பரிசையும் பாராட்டுச் சான்றிதழையும் பெற்றுக் கொண்டார்.

வீட்டுத்தோட்டப் போட்டிகள் கமநல சேவை நிலையப் பிராந்திய மட்டத்தில் நடத்தப்பட்டு அதில் முதலாம் இடத்தைப் பெற்றவர்கள் [illegible] ரீதியிலான போட்டி நடைபெற்றது.

# கைத்தொழில் அமைச்சின் கீழுள்ள கூட்டுத்தாபனங்களின் நடவடிக்கைகளை தனியாரிடம் வழங்க முடிவு

(கொழும்பு)

கைத்தொழில் அமைச்சின் கீழ் இயங்கும் கூட்டுத்தாபனங்களின் நடவடிக்கைகளை தனியார்துறையினருக்குவழங்குவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. இக்கூட்டுத்தாபனங்களை தனியார்துறையினருடன் இணைந்து நடத்துவதற்கான நடவடிக்கைகளை கைத்தொழில் அமைச்சு எடுத்து வருகிறது.

இதனடிப்படையில் கனிப்பொருள், கனிப்பொருள்அடிப்படையிலான கைத்தொழில்களுக்கான ராஜாங்க அமைச்சின் கீழ் இயங்கும் உப்புக் கூட்டுத்தாபனம், அரச கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனம், அரச சுரங்க கனிப்பொருள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றினை தனியார் மயமாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு கனிப்பொருள், கனிப்பொருள் அடிப்படையான கைத்தொழில்களுக்கான ராஜாங்க அமைச்சர் திரு. ஆரியரத்ன ஜயதிலக்கா அண்மையில் சபுகஸ்கந்தை உரக்கூட்டுத்தாபனத்தில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்,

அங்கு அவர் மேலும் கூறியதாவது:

அரசின் நிர்வாக பரவலாக்கத்தின்கீழ் மேற்கூறிய மூன்று கூட்டுத்தாபனங்களின் தலைமை அலுவலகங்கள்சபுகஸ்கந்த உரக்கூட்டுத்தாபனத்தின் கட்டிடங்களுக்கு மாற்றப்படவுள்ளன. இதுவரைகாலமும் அமைச்சின்கீழ் இயங்கிய கூட்டுத்தாபனங்கள் தமது உற்பத்தி நடவடிக்கைகளை முன்னுரிமையின் அடிப்படையில் போட்டிக்கு இடமில்லாத வகையில் நடத்திவந்தன. சில கூட்டுத்தாபனங்கள் நட்டமடைந்தபோது அவைதொடர்ந்தும்நடத்தப்பட்டன. எனினும் எதிர்காலத்தில் இவ்வாறு கூட்டுத்தாபனங்கள் நட்டமடையும் வகையில் இயங்கஅனுமதிக்கப்படமாட்டாது. அமைச்சின் கீழ் இயங்கும் கூட்டுத்தாபனங்கள் தொடர்பாக அமைச்சு புதிய கொள்கைகளை நடைமுறைப் படுத்தவுள்ளது.

இதனடிப்படையில் தற்போது தனியார் துறையினருக்கும் கூட்டுத்தாபனங்களில் இடமளிக்கப்படவுள்ளது. கூட்டுத்தாபனங்களில் தனியார்துறையாக்கலுக்குதேவையான சகல வசதிகளும் அமைச்சினுல் செய்து கொடுக்கப்படவுள்ளது. எனினும் அரசுக்கு கூடுதலான நன்மைகள்கிடைக்கும் பட்சத்திலேயே இவ்வாறு இடமளிக்கப்படும் நட்டமடையும் கூட்டுத்தாபனங்கள் எக்காரணம் கொண்டும் மூடப்படமாட்டாது.

கூட்டுத்தாபனங்களை தனியார் மயமாக்கினுலும் அரசின் கட்டுப்பாட்டிலேயே அவை இயங்கும். கூட்டுத்தாபனங்களை தனியார்மயமாக்கும் போது அதற்கான ஆலோசனைகளை வழங்குவதற்கென ஒரு உயர்மட்ட ஆலோசனைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் தேர்ச்சி பெற்ற தொழில் நிபுணர்கள், தொழிலதிபர்கள், பல்கலைக் கழக பேராசிரியர்கள், பொது மக்கள் ஆகியோர் உள்ளடக்கப்பட்டுள்ளனர். (து)

# இராசி பலன்

06-06-1989

திருதியை இரவு 8-11வரை; பனர்பூசம் பின்இரவு 5-34 வரை. சித்தயோகம்; விவசாய நடவடிக்கைகளுக்கு சிறப்பான தினம்; இராகுகாலம் 2-52 முதல் 4-26 வரை.

மேடம்:- வயிற்றில் ரோகம், சுப செய்தி, சகோதரர் உதவி, குடும்பத்தில் பிரிவு, வேலைப் பளு.

இடபம்:- கடன் வசூல், தூரதேச பயணம். கண்ணியக்குறை, ஏமாற்றம், ஆலயதரிசனம்.

மிதுனம்:- காரிய நஷ்டம், தொழில் சிந்தனை, குடும்பத்தில் குழப்பம், கோபமிகுதி. கவலை.

கடகம்: காதல்வெற்றி அதிகாரிகள் பாராட்டு, தலைமை தாங்குதல், கடித உறவு. குடும்பக்கவலை.

சிங்கம்:- நீட்டநாள் பிரச்சனை தீரும், அதிக செலவு. நண்பர்களால் உதவி, தொழில் மேன்மை.

கன்னி:- அந்நியவாசம், அதிக யோசனை, நோய் உபாதை, பெரியோர் பகை, சோம்பல்.

துலாம்: புதிய ஸ்தானம், பணவகை உற்சாகம், மக்களால் புகழ், அதிகாரச்சிறப்பு, வெற்றி.

விருச்சிகம்:- அதிர்ஷ்டம்நழுவுதல், குடும்பத்தில் மனஸ்தாபம், தொழில் பிரச்சனை, அவமானம்.

தனுசு:- கோள் சொல்லுதல், மாமன்வகை உறவு, மனச்சுமை, எதிர்கால சிந்தனை, அகால போசனம்.

மகரம்:- நினைத்தது கைகூடும்; காதல் உறவு. அறிஞர் சந்திப்பு, பாராட்டு, மகிழ்ச்சி.

கும்பம்:- வெளிநாட்டு உறவு, விவாகப் பேச்சு, குடும்பத்தில் அந்நியோன்யம், தொழில் லாபம்.

மீனம்:- ஒதுக்கப்படுதல், அதிகாரிகள் சீற்றம், பணச் சிக்கல், யோசனை மிகுதி, சோம்பல்.

# "விளையாட்டுக்கும் கலைக்குமே கல்வியில் முக்கிய இடம்"

(யாழ்ப்பாணம்)

"இன்றைய கல்வியில் முக்கிய இடம் வகிப்பவை விளையாட்டும் கலைகளுமாகும். எந்தப்பிள்ளையும் அறிவு குறைந்ததாக இருப்பதில்லை, எல்லாப் பிள்ளைகளிடமும் திறமை உண்டு. சந்தர்ப்பம் ஏற்படுவதைப் பொறுத்தே ஒரு பிள்ளையின் திறமை வெளிப்படுகின்றது. விளையாட்டில் ஊக்கத்துடன் பங்குபற்றும் பிள்ளை தன்னை அலங்கரிப்பதில் பெற்ருேர் உதவியை எதிர்பார்க்கமாட்டாது".

இவ்வாறு நல்லூர் சென். பெனடிக்ஸ் றேமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கல்வியதிகாரி திரு. சு. சிவநாயகமூர்த்தி தெரிவித்தார்.

விளையாட்டுப் போட்டிகள் மேற்படி வித்தியாலய அதிபர் அருட் செல்வி எம். லைசா (ஏ.சி.) தலைமையில் நடைபெற்றது.

நல்லூர் கொத்தணிப் பாடசாலைகளின் அதிபர் திரு. மு. இராமலிங்கம் பேசுகையில், "பெற்ருேர்கள் தமது பிள்ளைகளை எந்தப் பாடசாலையில் கல்வி பயில அனுப்புகிருர்களோ அப்பாடசாலை தமது பாடசாலை என்று எண்ணி அதன் அபிவிருத்திக்காகப் பாடுபடவேண்டும்" என்றுர்.

றேஸ் - லில்லி இல்லங்களுக்கிடையே நடைபெற்ற இவ் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

# "சகல இன மக்களுக்கும் பாதுகாப்பு அவசியம்"

(வவனியா)

"இந்நாட்டின் வரலாற்றிலேயே மக்கள் தொண்டர் படை அமைப்பு ஒருமைல் கல்லாகும். தமிழ் பேசும் மக்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்படக்கூடிய ஒரு பாதுகாப்பு படையாக இது செயல்படும்.

இவ்வாவறு வடக்கு கிழக்கு மாகாணமுதல்வர் வரதராஜப் பெருமாள் வவுனியா பொலிஸ் நிலைய மைதானத்தில் நடைபெற்ற மக்கள் தொண்டர் படை அணிவகுப்பு வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

170 படை வீரர்கள் தமது மூன்று மாதகால பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறினுர்கள்.

திரு. வரதராஜபெருமாள் அங்கு மேலும் பேசுகையில் கூறியதாவது:

இக்கட்டான நிலையிலும் இப்படையில் சேர்ந்துள்ளவர்கள் மிகவும் நெருக்கடியான கட்டத்திலும் ஆபத்துக்களை சந்திக்க வேண்டிய காலமாகவுள்ளது.

இப்படையினர் மக்களுடன் விசுவாசமாகவும் அன்புடனும் நடந்து கொள்ள வேண்டும் மக்களே அவர்களுக்கு என்றும் துணையிருப்பார்கள்.

இந்நாட்டில் சகல இன மக்களும் பாதுகாப்பாகவும், சுதந்திரமாகவும், பயமின்றியும் வாழவேண்டும் ஒற்றுமையையும், சமாதானத்தையும் ஜனநாயகத்தையும்ஏற்படுத்த வடக்கு கிழக்கு மாகாண சபை என்றும் பாடுபடும்.

வடக்கு கிழக்கு பிராந்தியங்களுக்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் திரு. ஈ. ஆனந்தராஜாவும் இந்திய அமைதிப்படை உயர் அதிகாரிகள் பலரும் இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர்.

வன்னிமாவட்ட எம்.பி. யான திரு. இரா. குகனேஸ்வரனும் வைபவத்திற்கு வந்திருந்தார்.

## பாதிக்கப்பட்ட

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

னர் என்றும், இன்னும் பதினைந்து ஒவசியர்கள் தேவை என்றும், இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொத்தணிப் பாடசாலைகள் விளையாட்டுப் போட்டி

(மன்னர்)

பேசாலை கொத்தணிப் பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டிகள் பேசாலையில் நடைபெற்றது. பேசாலை கொத்தணி அதிபர் திரு. எஸ். ஆர். சிரில் தலைமைவகித்தார்.

இப்போட்டியில் பேசாலை, சிறுதோப்பு, துன்குகுடியிருப்பு, கட்டுகாரன் குடியிருப்பு, தலைமன்னார் பியர், தலைமன்னார் கிராமம் ஆகிய பாடசாலைகள் பங்கெடுத்தன.

பேசாலை முதலிடத்தையும், தலைமன்னார் கிராமம் இரண்டாமிடத்தையும், தலைமன்னார் பியர் மூன்றுமிடத்தையும் பெற்றுக்கொண்டன. பிரதம அதிதியாக மன்னர் பிரதம கல்வியதிகாரி ஜனுப் இலட். ஏ. ரஹீம், சிறப்பு விருந்தினராக கட்டளைக்குரவர் வணபிதா ஜே. பி. தேவராசா அடிகளாரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கொத்தணிப் பாடசாலைச் செயலாளர் திரு. எஸ். மாட்டீன் டயஸ் நன்றியுரை வழங்கினர்.

காங்கேசன்துறை

## கொத்தணி அதிபர்

(சுன்னகம்)

காங்கேசன்துறை கல்வி வட்டாரத்தைச் சேர்ந்த கட்டுவன்புலம் மகா வித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றி வந்த திரு. க. இராசதுரை கொத்தணி அதிபராகப் பதவி உயர்வு பெற்று காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

அ.தி.மு.க.வை மீண்டும் சின்ன பின்னப்படுத்த

# கருணாநிதி முயல்வதாக ராஜீவிடம் ஜெயலலிதா புகார்!

(சென்னை)

அண்ணா தி. மு. வை மீண்டும் சின்னபின்னப்படுத்த மூப்பனார் மூலம் தமிழக முதல்வர் மு. கருணாநிதி முயன்றுவருவதாக செல்வி ஜெயலலிதா குற்றஞ்சாட்டியுள்ளார்.

தமிழக எதிர்க்கட்சித்தலைவியும் அ. தி. மு. பொதுச் செயலாளருமான செல்வி ஜெயலலிதா, பிரதமர் ராஜீவ் காந்திக்கு எழுதியுள்ள கடிதமொன்றிலேயே அவர் இவ்வாறு குற்றஞ்சாட்டினர்.

அ. தி. மு. க.வைச்சேர்ந்த திரு. குழந்தைவேலு எம், பி, மூலமாக அனுப்பிவைத்துள்ள அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

''பாராளுமன்ற தேர்தல் முடிவுகள் வெளியாகும்வரை ஜி,கே. மூப்பனருக்குகட்சியில் எந்தப்பொறுப்பையும்கொடுக்காமல் ஒதுக்கிவைப்பதுதான் நமது கூட்டணிக்குச் சாதகமான சூழ்நிலையைப் பலப்படுத்தும்.

''அகில இந்திய காங்கிரஸின் பொதுச் செயலாளராக மூப்பனரை மீண்டும் நியமித்தால் கருணாநிதிக்கு உதவவே அவர் எல்லாச் சூழ்நிலையிலும் முயற்சிப்பார். அதுமட்டுமல்ல மூப்பனர் தனிக்கட்சியை ஆரம்பிக்க கருணாநிதி உற்சாகப்படுத்திவருகிறார். எனவே பாராளுமன்றத் தேர்தல் முடியும்வரை மூப்பனர் காங்கிரஸிலிருந்து வெளியேறுது பார்த்துக்கொள்வதுடன் கட்சியில் பதவி எதனையும் வழங்கவேண்டாம் என்றும் ஆலோசனை கூற விரும்புகிறேன்''.

## ''திலீபனின் 'எனது இராகங்கள்' எம்மைச் சிந்திக்கவைக்கிறது''

### வெளியீட்டு விழாவில் உரை

(யாழ்ப்பாணம்)

''மரபுக் கவிதைகள் விண்ணையே பார்த்துக்கொண்டிருக்கும் மலர் வர்க்கங்கள். புதுக் கவிதைகளோ விண்ணிலிருந்து மண்ணைப் பார்த்துக் கொண்டிருக்கும் சூரிய- சந்திரர்கள். பொய்மையிலிருந்து சத்தியத்துக்கும், இருட்டிலிருந்து வெளிச்சத்துக்கும் மரணத்திலிருந்து நித்தியத்துக்கும் செல்வோம் என்று எல்லோரையும் சிந்திக்க வைக்கிறது. வவுனியா திலீபனின் புதுக் கவிதைகள், திட்டங்களும், சட்டங்களும் மக்களுக்குத் தானும்- நம்புவோம். விதை தூவி துக்கத்தை அறுத்துச் சுமக்கும் விவசாயி, மார்புக்காம்புகளைத் திருகும் குழந்தைகளுக்கு தண்ணீர்ப் பானம் பருக்கும்தாய். இந்தச் சமூக அமைப்பைமாற்றி புது மனிதகுலத்தை உருவாக்க இக்கவிதைகள் எமக்கு உரமூட்டுகின்றன.''

வவுனியா திலீபன் எழுதிய 'எனது இராகங்கள்' கவிதை நூல் வெளியீட்டு விழாவில் நூலை மதிப்பீடு செய்து உரையாற்றுகையில் இலங்கை சட்ட பீடத்தைச் சேர்ந்த திரு. ஆர். தயாபரன் குறிப்பிட்டார்.

வவுனியா மகாவித்தியாலய ஐயாத்துரை அரங்கில் இந்நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது.

வன்னி இலக்கிய கலாமன்றம் நடத்திய இந்த நூல் வெளியீட்டு விழாவுக்கு அதன் தலைவி ஆசிரியை செல்வி ரி. திசரேணுகா தலைமை வகித்தார்.

திரு. தயாபரன் தொடர்ந்து தமது மதிப்பீட்டுரையில் ''புதுக் கவிதை வளர்ச்சியை இரண்டு கட்டமாகப் பிரித்துப் பார்க்கலாம். 1920 ம் ஆண்டு முதல் 1960ம் ஆண்டு வரை ஒரு கட்டமும், 1960ல் இருந்து இன்றுவரை மற்றொரு காலமுமாகும். முதலாவது கட்டத்துக்கு பாரதியார் தலைமை வகிக்கிறார். இரண்டாவது கட்டத்தில் பல கவிஞர்கள் உள்ளனர், பலர் தோன்றிக்கொண்டுமிருக்கிறார்கள். பாரதியாரின் கவிதைகள் தமிழர்களை மட்டுமல்ல, இந்திய தேசத்தை மட்டுமல்ல உலக மக்கள் சிந்திக்க வைத்துக் கொண்டிருக்கின்றன. இரண்டாவதான காலகட்டத்தில் பல புதுக்கவிதை கலைஞர்கள் பாடிக் கொண்டிருந்தாலும் அக் கவிதைகள் பெருமளவில் மக்களைத் தாக்கத்துக்குள்ளாக்கவில்லை. இந்த நிலையிலே வயதில் இளையவராக இருந்த போதிலும் வவுனியா திலீபனின் கவிதைகளை நாம் வாசிக்கும்போது, சிந்திக்க வேண்டியவர்களாகவே இருக்கிறோம். உதாரணத்துக்கு நமது நாட்டில் உள்ள பெண்கள் நிலைபற்றி அவர் அழகாக இரண்டுவரிகளில் ''உதடுகளில் புன்னகை இதயங்களில் காயம்'' என்று கூறுகிறார். இங்கே நமது மண்ணில் உயிரோடு இருக்கும் எங்கள் அனுதை மும்தாஜ்களின் நிலையை இது உணர்த்தவில்லையா? இப்போது அவர்களுக்கு வாழ்வு வேண்டும். கவிஞர் திலீபன் போன்றவர்கள் தமது உண்மை என்கிற உறையுள் இருந்து 'வாள்' களை வெளியே வீசட்டும். அழுகிப் போய் இருக்கும் நமது சமூகத்தை அந்த 'வாள்' கொண்டு துப்புரவு செய்வோம்'' என்றார்.

நூலாசியர் பதிலுரை வழங்கினர். வன்னி இலக்கிய கலாமன்றச் செயலாளர் திரு. பொன். பார்த்தீபன் நன்றியுரை கூறினர்.

செல்வி எம். அருட்செல்வி, திரு. எம். கண்ணதாசன், ஆ. ஆசன் ஆகியோரது இசை, கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவன

## விவசாய டிப்ளோமா பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம் நடாத்திய விவசாய டிப்ளோமா பயிற்சிநெறி 1988/1989 பரீட்சையில் சித்தியடைந்தோர் விபரம் வருமாறு.

முதலாம் பிரிவு: க. குகநேசன் (மீசாலை), இரண்டாம் வகுப்பு (மேற்பிரிவு), அ. சிவாகரன் (அளவெட்டி), திருச்செல்வம்(அளவெட்டி), சி. யோகராணி (சுதுமலை), இராஜினி (கரம்பொன்), கை. சிவநேசன் (யாழ்ப்பாணம்), த. தற்பரன் (வட்டுக்கோட்டை),

இரண்டாம் வகுப்பு கீழ்ப் பிரிவு:

ப. முரளிதரன் (கந்தர் மடம்), ம. பரணன் (வட்டுக் கோட்டை) ச. நந்திகாதிலகேஸ்வரி (சுளிபுரம்), இ. கெங்காதரன் (கொக்குவில்), அ. நளினி (நல்லூர்), ந. கோணேஸ்வரன் (தெல்லிப்பளை)

சாதாரணவகுப்பு சு. புஷ்பகாந்தி (கல்வியங்காடு) இ. நித்தியகுமார் (மானிப்பாய்)

### கல்வியுடன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

எடுப்பேன்,

இவ்விழாவில் சிவஸ்ரீ கி. சோமசுந்தரக் குருக்கள் விளக்கேற்றி ஆசியுரை வழங்கினர். சாவகச்சேரி கொத்தணி அதிபர் திரு. க. பாலச்சந்திரன், பாடசாலை அபிவிருத்திச் சபையின் போஷகரும், சாவகச்சேரி நகரசபையின் விசேட ஆணையாளருமான திரு. நவரத்தினராஜா ஆகியோரும் உரையாற்றினர்.

## 'சென்றலைட்ஸ்' சாம்பியன்

(யாழ்ப்பாணம்)

ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தினர் ''ஷப்ரு'' வெற்றிக்கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட விளையாட்டுக்கழகங்களிடையே நடாத்தி வந்த ''நொக்கவுட்'' கிரிக்கெட் போட்டியில் 'சென்றலைட்ஸ்' கழகம் சாம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சாம்பியன் மோதலில் 'சென்றலைட்ஸ், கழகத்தை எதிர்த்து 'ஷப்ரு' அணிமோதியது,

ஸ்கோர் விபரம்: 'சென்றலைட்ஸ், கழகம் 40 ஓவர்களில் 9 விக்கெட் நஷ்டத்துக்கு 208 ஓட்டங்கள் 'ஷப்ரு' அணி 36 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் 185 ஓட்டங்களைப் பெற்றது. (வி)

## இயக்குநர் சபை தெரிவு

(பூநகரி)

பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் பூநகரி ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் திரு. பொன். தில்லைநாதன் தலைமையில நடைபெற்றது. பிராந்திய கூட்டுறவுப் பரிசோதகர் எஸ். சிவகுருநாதன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

புதிய இயக்குநர் சபை உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். திரு. பொன். தில்லைநாதன் (தலைவர்), திரு. எம். கச்சுமுகமது (உபதலைவர்) வ. இராசலிங்கம், அ. ஜெயசீலன் பொ. லோகேஸ்வரன், வீ, சரவணபவான் எஸ், மரியநாயகம்

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



கௌண்டின்ய
வ. இரகுராசசர்மா
(கோபி)
தோற்றம்: 26-04-1965
மறைவு: 30-05-1987

எதிலும் உன் நினைவுகளை தந்து சென்றாயோ மகனே!

அப்பா, அம்மா,
அண்ணா, தம்பி, தங்கை.
''செந்திலகம்''
கொழும்புத்துறை.
(சி 2901)

உ

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
கந்தர் குழந்தைவேலு
(யாழ். நிலுவைகள்-அளவைகள் திணைக்கள அலுவலர், தலைவர்: சிவானந்தா சனசமூக நிலையம்-கூவில், கீரிமலை)

மலர்வு: 02-04-1940
கூவில்-கீரிமலை.

உதிர்வு: 30-05-1987
அல்வாய்-வடமராட்சி

ஆண்டுத்திதி:
06-06-1989

''உழைப்பால் சேவையால் உம்புகழினைப்
போற்றுபவர் பலர்!
கடமைக்காய் வடமராட்சி சென்றீர்
எம் தெய்வமே!
இன்றுவரை நீங்கள் திரும்பிவரக்
காணேம் ஐயா!
உங்கள் உயிர் பறித்தனனே பாவி
லிபரேஷன்-ஒப்பரேஷனில்
வருவீர் வழிநடத்துவீர் என வழி
பார்த்திங்கே
ஏங்குகின்றேம் நாமே.''

உங்கள் ஆத்ம சாந்திக்காக சிவன்சேவடியை வேண்டி நிற்கும்:

மனைவி: கு. பாக்கியம், மகன்மார்: கு. பிரதிபன், கு. பார்த்திபன், மகள்: கு. பிரியதர்ஷினி.
கூவில், கீரிமலை.
(சி 2303)

## பிறந்ததின வாழ்த்து

### கேதனன் சர்வேஸ்வரன்

இணுவில் கிழக்கு காரைக்காலில் வசிக்கும் சர்வேஸ்வரன் புஸ்பராணி தம்பதிகளின் செல்வப் புதல்வன் கேதனன் தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று அவரது இல்லத்தில் குதூகலமாகக்கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அம்மம்மா, அம்மப்பா, அப்பம்மா, வாமதேவன் பெரியப்பா, பெரியம்மா, பரமேஸ்வரன் பெரியப்பா, பெரியம்மா குடும்பத்தினரும், ஜேர்மனியில் இருக்கும் சிவம் பெரியப்பா, பெரியம்மா, கனடாவில் இருக்கும் சின்ன மாமா, சின்னமாமி, ஜேர்மனியில் இருக்கும் ராசன் பெரியப்பா, பெரியம்மா, சுவிஸில் இருக்கும் சீனி மாமா, கனடாவில் இருக்கும் ராசு மாமா, ஜேர்மனியிலிருக்கும் நாதன் சித்தப்பா, கனடாவிலிருக்கும் கிளிச் சித்தி, சாந்திச் சித்தி, வவாச்சித்தி, சின்னமாமி, மாமா, பெரியமாமி, மச்சான்மார், மச்சாள்மார், சுபா அக்கா, அண்ணன்மார், ஜேர்மனியிலிருக்கும் சிவா அண்ணா கயன், வித்தியா, அனிதா மற்றும் அக்கா, அண்ணன்மார் அனைவரும் கேதனன் பல்வகைச் சிறப்பு பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றனர்.

(சி 2811)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பு சென்ற ஊழியர் சங்க குழுவினர் திரும்பினர்

# யாழ். பல்கலைக்கழகத்தில் தொடரும் வேலைநிறுத்தம்!

## விரிவுரைகளை இன்று ஆரம்பிக்க யோசனை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் தமது வேலை நிறுத்தப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தப் போவதாக நேற்று அறிவித்துள்ளனர்.

இலங்கையில் உள்ள சகல பல்கலைக்கழகங்களிலும் வேலை செய்யும் ஊழியர்கள் சம்பள உயர்வுகோரி நடத்திவரும் வேலை நிறுத்தத்தில் யாழ். பல்கலைக்கழக ஊழியர்களும் இணைந்து கடந்த மூன்று வாரகாலமாக வேலைநிறுத்தம் செய்து வருவது தெரிந்ததே.

யாழ்ப்பாண நிலைமைகளை எடுத்துக் கூறுவதற்காக யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து சென்ற ஊழியர் சங்கப் பிரதிநிதிகள் கொழும்பில் பல்கலைக்கழகங்களின் ஊழியர் சம்மேளனப் பிரதிநிதிகளைச் சந்தித்து பேச்சுக்களை நடத்தி விட்டு யாழ். திரும்பியுள்ளனர்.

'மிகவும் சரியான, நியாயமான கோரிக்கைகளுக்காக நடத்தப்படும் இப்போராட்டத்தில் நாம் தொடர்ந்து பங்கேற்பது அவசியமாகும் என்பதால் நாமும் தொடர்ந்து வேலை நிறுத்தத்தை மேற்கொள்ளுவோம்' என ஊழியர் சங்கப் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர்.

இதே சமயம் நேற்று யாழ். பல்கலைக்கழகநடவடிக்கைகுழு இந்தவேலை நிறுத்தம் சம்பந்தமாக ஆராய்வதற்காகக் கூடியது.

நடவடிக்கைக் குழுவில் அங்கம் வகிக்கும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளும், மாணவர் சங்கப்பிரதிநிதிகளும் ஊழியர்களின் நியாயமான கோரிக்கைக்கான போராட்டத்தை தாம் ஆதரிப்பதாக தீர்மானித்தனர். ஆயினும், விரிவுரைகள் நடைபெறவேண்டும் என்ற கருத்தை முன்வைத்தனர்.

ஊழியர் சங்கப் பிரதிநிதிகள் தமது போராட்டம் தொடரும் என்பதால் தம்மில் எவரும் எந்த வேலையையும் செய்ய முடியாது என்றும் விரும்பினால் விரிவுரை வகுப்புகளை நடத்தலாம் என்ற தமது கருத்தை ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளுக்கும், மாணவர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் எடுத்துக் கூறினார்கள்.

இன்று முதல் விரிவுரைகள் நடைபெறலாம் என்று எதிர் பார்க்கப் படுகிறது.

## பல்கலைக்கழக ஊழியரின் மற்றுமொரு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகத்தில் சில வெற்றிடங்களை நிரப்ப நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்தக் கட்டத்தில் 'பல்கலைக் கழகத்தில் வேலை செய்து ஓய்வு பெற்றவர்களின் பிள்ளைகளுக்கு முதலிடம் அளியுங்கள்' என்று யாழ். பல்கலைக் கழக ஊழியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

பல்கலைக் கழகங்களின் மானிய ஆணைக்குழுவின் அண்மைக்காலப் பணிப்புரைகளில் ஏற்கனவே பல்கலைக் கழகங்களில் வேலைசெய்து ஓய்வு பெற்றவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு வேலை வாய்ப்புக்களில் முதலிடம் அளிக்கப்படும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளதை ஊழியர் சங்கம் தமது கோரிக்கைக்கு ஆதரவாக சுட்டிக்காட்டியுள்ளது.

சேவை மூப்பு அடிப்படையில் பதவியுயர்வுகள் வழங்கப்படவேண்டும் என்பது ஊழியர் சங்கத்தின் மற்றொரு கோரிக்கையாகும்.

ஊழியர் சங்கத்தின் மேற்படி கோரிக்கைகள் தொடர்பாக யாழ். பல்கலைக்கழக அதிகாரி ஒருவர் கருத்து வெளியிடுகையில், ஆணைக் குழுவின் பணிப்புரைகள் சட்டரீதியாக எமக்கு கிடைத்து விட்டால் அவைகளை நடைமுறைப்படுத்த தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்.

இன்று நடைபெறவிருக்கின்ற தொழிலாளர் பதவிக்கான நேர்முகப் பரீட்சை திட்டமிட்டபடி நடக்கும் எனவும் அறியப்படுகிறது.

### மருதானை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யோகம் மேற்கொண்டிருந்தனர்.

மேற்படி சம்பவங்களை வன்மையாக கண்டித்துள்ள ஈ. எல். ஜே. பி.' கட்சி நீதியான விசாரணை நடத்தி சம்பந்தப் பட்டவர்களை தண்டிக்க வேண்டுமென்றும், இனிவரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுதிருக்க நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுள்ளது.

### வெள்ளப்பெருக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ள மக்களை மீட்பதற்கு 'ஹெலிகப்டர்களை' அனுப்பவும் தயாராக இருப்பதாக இந்தியா தெரிவித்துள்ளது.

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவுக்கு அனுப்பிவைத்துள்ள அவசர செய்தி ஒன்றிலேயே இந்த உதவி பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் திரு. மல்ஹோத்திரா மூலம் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ள இச்செய்தியில், பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு இந்திய மக்களின் சார்பில் பிரதமர் கவலையையும் தெரிவித்துள்ளார்.

### இலங்கை-இந்திய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புதுடில்லி வந்திருந்த இலங்கை வெளியுறவுச் செயலர் திரு. பேர்னுட் திலகரட்ன இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியை நேற்றுச் சந்தித்தார்.

இந்திய அமைதிப்படையை வாபஸ் பெறுவது தொடர்பான செய்தியை இலங்கை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா உத்தியோகபூர்வமாக இந்தியப் பிரதமருக்கு திரு. பேர்னுட் திலகரட்ன மூலம் அனுப்பிவைத்துள்ளதாகவும் [illegible] வித்ததாக கூறப்படுகிறது.

## மரண அறிவித்தல்

### திருமதி பாக்கியலட்சுமி ஆறுமுகம்

திருமதி பாக்கியலட்சுமி ஆறுமுகம் அவர்கள் 4-6-89ல் காலமானூர். இவர் காரைநகர் வலந்தலையைச் சேர்ந்த காலம்சென்ற மலேசியா அப்போதுக்கரி K. S. ஆறுமுகத்தின் அன்புமனைவியாரும், காலம்சென்ற பத்மநாதன் (மலேசியா) சண்முகநாதன் (Safety Children Colombo) பாலசிங்கம் (Field programme Assistant English Education dept, N'Eliya Region), குணசிங்கம் (U. K.), குலசிங்கம் (Saudi Arabia), குமாரசிங்கம் (W. Germany), திருமதி ஜெ. சரோஜினி ஆகியோரின் அருமைத் தாயாரும், தமயந்தி பத்மநாதன் (மலேசியா), பரமேஸ்வரி சண்முகநாதன் (இளைப்பாறிய ஆசிரியை, பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி), பரமேஸ்வரி பாலசிங்கம் (ஆசிரியை வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம்), புஸ்பா குணசிங்கம் (U. K.), ஜெகதீஸ்வரி குமாரசிங்கம், ஜெயலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும், நஞ்சினி அமரசிங்கம், பத்மினி, சாந்தினி, சந்திரசேகரம், ஆறுமுகம், ஷியாமா, சுரேஷ், ரமேஸ், சாயிஸ்கந்தன், சுபாஷினி, செந்தூரன், அமிர்தராஜ் ஆகியோரின் அன்புப் பேத்தியாரும், காலம்சென்ற சிவகுருநாதன் (மலேசியா), திருமதி தனலட்சுமி நடராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ராஜதேவன் (A. Baur & Co., Jaffna), ஜெயதேவன் (Canada), தர்மதேவன் (W. Germany), திருமதி கௌரி குணநாதன் ஆகியோரின் அன்புப் பெரிய தாயாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை (6 - 6 - 89) பிற்பகல் 3.30 மணியளவில் 265, நாவலர் வீதி, ஆனைப்பந்தி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள்யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ஆ. குலசிங்கம் (மகன்)
265, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-2812)

# ராஜீவ்காந்தி மீது வி.பி.சிங் கண்டனம்

(புதுடில்லி)

''பிரதமர் திரு. ராஜீவ் காந்தியின் வெளிநாட்டுக் கொள்கை நாளுக்கு நாள் வித்தியாசப்படுகின்றது. ஒரு நாளைக்கு குறிப்பிட்ட ஒரு இயக்கத்தை ஆதரிக்கிறார். பிறிதொரு நாளில் இலங்கை அரசாங்கத்தை ஆதரிக்கிறார்''.

இவ்வாறு ஜனதா தள் கட்சித் தலைவர் திரு. வி. பி.சிங் இந்தியாவின் அண்டை நாடுகளுடனான உறவுகள் தொடர்பாக திரு. ராஜீவ் காந்தியின் கொள்கையை வன்மையாகக் கண்டித்து கருத்துத் தெரிவித்தபோது தெளிவுபடுத்தியிருக்கிறார்.

## மலையகத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்தாவது:

''மலையகம் ஒன்று மட்டுமே தற்போது தமிழர்கள் பாதுகாப்பாக வாழக்கூடிய ஒரு பிரதேசமாக எஞ்சியுள்ளது. இந்தப் பிரதேசத்திலும் கிராமத்தவர்களை குடியேற்ற அரசு எடுத்துள்ள முடிவு மலையகத் தமிழர்களை அழிப்பதற்கான ஒரு சதியாகவே இருக்க முடியும். இக்காணிகள் தமிழர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படும் என்ற விளக்கத்தை நாம் ஏற்கமுடியாது. அப்பிரதேசத்தில் தொடர்ச்சியாக வாழும் தமிழ்மக்களுக்கு காணிகள் வழங்கப்பட்டாலும் அதற்கு நிகரான தொகையில் பெரும்பான்மை இனத்தவர்கள்அங்கு குடியேற்றப்படுவதனுல்பெரும்பான்மையினரின் எண்ணிக்கை தமிழர்களின் எண்ணிக்கைக்கு நிகராக அதிகரிக்கப்படுகிறது. என்பதே உண்மையயாகும்.

இதுபோன்ற திட்டமிட்ட குடியேற்றங்களினுல்தான் இனப்பிரச்சினை இன்றும் தீர்க்கப்படாமல் இழுத்தடிக்கப் படுகிறது.

''மலையகத் தமிழர்களை சிதறவைப்பதற்காக அரசு பல திட்டங்களை செயற்படுத்த தீர்மானித்துள்ளது. புதிய நகர உருவாக்கங்கள், நகர விஸ்தரிப்பு, புதிய பிரதான பாதை அமைப்பு என அபிவிருத்தித்திட்டங்கள் என்ற போர்வையில் தமிழர்கள் செறிவாக வாழும் பகுதிகளில் திட்டமிட்ட புதிய குடியேற்றங்களை ஏற்படுத்தவுள்ளது.

இத்திட்டத்தின் ஒரு அங்கமாகவே நுவரெலியா அரசாங்க அதிபர் பிரிவை மகாவலிஅபிவிருத்தி அதிகாரசபை பொறுப்பேற்றுள்ளது. மத்திய அரசின் நேரடி நிர்வாகத்தில் இயங்கும் இச்சபை இப்பிரதேசங்களில் நினைத்த காணிகளை சுவீகரிக்கவும், குடியேற்றங்களை நிறுவும் அதிகாரமும் உடையது. நடைமுறைக் காணிச்சட்டங்களோ மகாணசபை அதிகாரங்களோ இச்சபையைக் கட்டுப்படுத்த முடியாது.

''மலையகத்தில் எல்லைப்புறத் தோட்டங்கள் பல மூடப்பட்டு காணிகள் பெரும்பான்மை மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு விட்டன. பல தோட்டங்கள் திட்டமிட்டு, கைவிடப்பட்ட நிலையில் காடுகளாக்கி அதன்பின்னர் நஷ்டம் என்ற காரணம் காட்டியும் தோட்டங்கள் மூடப்பட்டுள்ளன.

''பிரசா உரிமை, வாக்குரிமை முதலியன கிடைப்பதால் எமது உரிமைகள் கிடைத்துவிட்டதாக கருதமுடியாது. பிரதேசம் பறிபோகுமானுல் இத்தகைய உரிமைகள் கிடைப்பதுகூட அர்த்தமற்றதாகிவிடும்.

''ஜனநாயக ரீதியில் செயற்படும் அரசியல் அமைப்பே எமது தாபனமாகும். ஜனநாயக வரம்புக்கு உட்பட்டு நம் இலட்சியத்துக்காக மக்களைத் தட்டி எழுப்பவும், போராடவும் நாம் துணிந்துள்ளோம். எவ்வித அச்சுறுத்தலுக்கும் பயந்து நோக்கத்தில் இருந்து நாம் பின் வாங்கப்போவதில்லை. எமது நியாயமான போராட்டத்தைத் தடுக்க அரசாங்கம் புதுப்புதுச் சட்டங்களை ஆக்குமாயின் அதனையும்மீறி செயற்பட எமது ஸ்தாபனமும் மக்களும் தயாராக இருக்கிருர்கள்'' என்று திரு. சந்திரசேகரம் 'ஈழநாடு'வுக்குத் தெரிவித்துள்ளார்.

### நாவற்குழி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கைதடி அமைதிப்படை முகாம் வீதியில் போடப்பட்டிருந்த தடைகளையடுத்து திரும்பிச் சென்றன.

குறிப்பிட்ட வீதியில் வாகனங்கள் செல்வது தடைசெய்யப்பட்டுள்ளதாக அமைதிப் படையினரின் பெயரில் கைதடிச் சந்தியில் அறிவித்தல் ஒன்று காணப்பட்டது.

### புத்தூர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி

பட்டுமீட் கப்பட்டன. இரண்டு சடலங்கள் அடையாளம்காண முடியாதளவுக்கு எரிந்த நிலையில் காணப்பட்டன, அடையாளம் காணப்பட்டு உறவினர்களால் சடலமாக மீட்கப்பட்டவர்கள் விபரம்; சடையன் கந்தையா (வயது 42) கண்டிக்காடு, தவசி நல்லதம்பி (வயது 39) கண்டிக்காடு, சின்னவன் சிவபாதம் (வயது 25) கண்டிக்காடு, வல்லிபுரம் துரைசிங்கம் (வயது 39) வாதரவத்தை, வல்லிபுரம் பாலசிங்கம் (வயது 35) வாதரவத்தை, தம்பிமுத்து யோகேந்திரம் (வயது 36) வாதரவத்தை, சுந்தரராசா வைகுந்தராசா (வயது [illegible]) வாதரவத்தை, தளையசிங்கம் ஜெயந்திரன் (வயது 24) வாதரவத்தை.

## இன்று நடைபெறும் இசைக்கச்சேரி

(யாழ்ப்பாணம்)

''ஆலபனு சங்கீதசபா'' யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறையுடன் இணைந்து வழங்கவிருந்த திருமதி குலபூஷணி கல்யாணராமனின் இசைக்கச்சேரி இன்று பிற்பகல் நல்லை ஆதினத்தில் நடைபெறும்.

### சுட்டுக்கொலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சுட்டுக்கொல்லப்பட்டார், பரமேஸ்வரன் முரளீதரன் (18 வயது) என்ற இளைஞரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

சுடப்பட்ட இளைஞர் தமது வீட்டிலிருந்து ரியூட்டறிக்கு நேற்றுக்காலை புறப்பட்டுச் சென்றபோது விசாரிக்கப்பட்டதாகவும் பின்னர் அவர் செல்ல முற்படும்போது சுடப்பட்டதாகவும் யாழ். ஆஸ்பத்திரியில் விசாரணையின்போது கொலையுண்டவரின் தகப்பனுர் தெரிவித்தார்.

யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட இளைஞரின் சடலம் விசாரணை முடிவில் தந்தையிடம் ஒப்படைக்கப் பட்டது. (கு)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1989ம் ஆண்டு ஜூன் மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper atthe Genenral Post Office Sr iLanka under number B/1003/[illegible] Eelanadu P. O. Box No: 49. Telegram, Eelanadu. Telephone; 22389. 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org